# உள்ளம்

டிசம்பர் 1989

விலை 5/-



இன்றைய முகங்கள்

● கலை ● இலக்கிய ● சமூக ● மாதஇதழ் - - வளர்மதிவெளியீடு

" நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் "

நோய்களை அழிப்பதற்கு மருந்துகள் அவசியம்

சகலவிதமான ஆங்கில மருந்துத் தேவைகளுக்கும்

நம்பகரமான ஸ்தாபனம்

# குறிஞ்சி பார்மசி அன் குரோசறி

இல 3 நவீன சந்தை
திருநெல்வேலி

**WESTERN MEDICINES**

| | |
|---|---|
| பால்மா வகைகள் | MILK FOODS |
| பிஸ்கட் | BISCUITS |
| சொக்கலெட் | CHOCOLATES |
| மாஜரீன் | MARGARINE |
| பட்டர் | BUTTER |
| கோழி இறைச்சி | BROILERS |
| கீல்ஸ் உற்பத்திப் பொருட்கள் | KEELS PRODUCTS |
| முட்டை | EGG ETC |

நியாய விலையில் பெற்றுக்கொள்ள

# KURINCHI PHARMACY & GROCERY

**NO. 3, Model Market,**
**Thirunelvely Jnnction**

( உங்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி )

**(Customers Satisaction is our Pleasure)**

( எமக்கு வேறு கிளைகள் இல்லை )

# நோக்கு

அன்பு வாசகர்களுக்கு,

தீபாவளி சிறப்பிதழ் குறித்து எழுதிய அனைத்து வாசகர்களுக்கும், நேரில் கதைத்தவர்களுக்கும் நன்றி.

இது சம்பிரதாயபூர்வமான தொன்றுதான்.

ஆனாலும் சம்பிரதாயங்களும் ஒருவித சடங்குகளாகி, சமூக நிர்ப்பந்தங்களுக்கும், தேவைகளுக்கும் அவசியமானதொன்றாகி நம் அன்றாட வாழ்வில் ஒன்றி விட்டது. சமீபகாலமாக இலக்கிய மேடைகளிலும், விழாக்களிலும் கூட இத்தகைய ,சம்பிரதாயங்களும், சடங்குகளும் மேற்குறிப்பிட்ட முறையிலேயே தவிர்க்க முடியாததொன்றாக ஆகி விட்டதால் (எவை எவையென விபரித்தல் தேவையற்றது. குறிப்பிடத்தக்கவர்கள் புரிந்து கொள்ளக் கூடியது ) அது குறித்து கருத்துக்களால் மோதிக்கொள்வதும், நையாண்டி செய்வதும் ஆக்க இலக்கியத்துறையில் ஆற்றல்உள்ளவர்களால் மேற்கொள்ளப்படுவது அவசியமற்றது. வருத்தத்திற் குரியது. என்ன செய்வது?

-நம் மண்ணில் முதிர்ந்த எழுத்தாளர்கள் – பல்துறை ஆற்றல் மிக்கோர்கள் பல விஷயங்களில் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்வது தான் .........

- நம் காயத்தை நாமே கிளறிக்கொள்வதை நிறுத்தா விட்டால் யாருக்கு நஷ்டம்.

- ஒரே ஒரு வார்த்தை,

''அர்த்தமற்ற விடயங்களில் முரண்பட்டு மூளையை வீணடிப்பதை விட ஆக்க பூர்வமான விடயங்களில் ஈடுபடுவது அவர்களுக்கும், நாட்டுக்கும் நல்லது.''

இதுவும் புரியா விட்டால் .........

நாமென்ன செய்வது ? அவர்களுக்காக அனுதாபப்படுவதைத் தவிர .........

□ □ □

□ சென்ற இதழ் தலையங்கத்தோடு வெளியான 'ஒரு கவிதை' பற்றி சிறு விஷயம்.

அதற்குள் ஏதோ 'பொடி' வைத்து ( அல்லது 'பொறி' வைத்து ) எழுதப்பட்டதாக சிலர் அர்த்தம் கொண்டதாக தெரிகிறது.

தலையங்கத்தோடு தொடர்பு படுத்தி எழுதப்பட்ட ஒரு கவிதை' மட்டுமே அது – ஆனால்

எவர் தலைக்காவது தகுதியாக இருந்தால்,(அல்லது இருப்பதாகத்தெரிந்தால்) சூடிக்கொள்ளலாம்; அல்லது சூட்டிப் பார்க்கலாம்.

□ □ □

புத்தி ஜீவிகளுக்கான பத்திரிகை, மக்களுக்கான பத்திரிகை என்னவித்தியாசம்? மக்கள் யார்? புத்தி ஜீவிகள் யார்? (இதற்குள் கூட கருத்து மோதல்கள் )

மக்களுள் புத்திஜீவிகள், புத்திஜீவிகளான மக்கள் – இவ்வளவே,
-மற்றதெல்லாம் விமர்சகர்களால கொடுக்கப்படும் குழப்பமான விளக்கங்களே ...

- அப்படியானால் முரண்பாடுகள் தான் ஏன் என்கிறீர்கள் ?

காலஓட்டத்தில், மக்களே அதற்கான விளக்கத்தைக் கொடுப்பார்கள்.
அந்தக்காலம்—

மக்கள் அனைவரும் (அல்லது பெரும்பான்மையோர்) புத்திஜீவிகளாகவும், புத்திஜீவிகள் (சாதாரண) மக்களாகவும் இருப்பர்.
காத்திருப்போம் .....

□□□

சமீபத்தில் நிறைய புத்தகங்கள் வெளியாகின்றன. (சிறுகதை தொகுப்பு, நாவல்கள், கவிதைகள்)
— சந்தோஷம் —
நிறைய வரவும் உள்ளனவாம் .........
—மகிழ்ச்சி
ஆனாலும் —
மக்களிலிருந்தும் மண்ணிலிருந்தும் அந்நியப்பட்டு, நாம் உணர்ச்சியற்றவர்களாக; இந்தக்காலகட்டத்தின் உயிர்க்குரல்கள் என்பதை மறந்து பேனாதூக்கும் அற்பஜீவிகளாக, வரலாற்றுக் கடமை மறந்தோராக, தம்மை இனங்காட்டும் படைப்புகளாக நம் படைப்பாளிகள் வெளியிடுவது தான் (ஓரிருவர் தவிர) வருத்தமாக இருக்கிறது.
பாரதியார் பாடிய —
''நெஞ்சில் உரமுமின்றி'' ...பாடல்கள் இவர்களுக்கே அர்ப்பணம்.

□□□

வழமையான மன்னிப்புக்கோரும் படலம்
— உள்ளத்தின் விருப்பத்திற்கு மாறாக, சக்திக்கு மீறி பல நிகழ்வுகள்.
—பத்திரிகைத்தாள் தட்டுப்பாடு. தாமதத்திற்கு காரணம் அதுமட்டுமே; என்ன செய்வது ?
—உங்களுக்கு நன்கு தெரிந்த விடயங்களை (எழுத்துப் பிழைகள் உட்பட) நெருக்கடிகளை நீங்களாகவே மன்னித்து விடுங்கள். தாமதங்களைத்தவிர்த்து பிழைகளைத் திருத்தி முன்னேறவே முயல்கிறோம்.

— சந்திப்போம் —

ஆசிரியர் குழு

---

ஒக்ரோபர், நவம்பர் இதழின் அட்டைப்படப் போட்டிக்கு ஏராளமானோர் கவிதைகளை அனுப்பியிருந்தனர். இவற்றில் ஓவியர் தயாவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பரிசு பெறும் கவிதைக்குரியவர்:

□ செ. ஞானராசா
செம்மண்தீவு
முருங்கன்
மன்னார்.

**சிறப்பான முறையில் கவிதைகளை எழுதிய மூவர்:**

□ வி. பானுமதி
உரும்பிராய் கிழக்கு
உரும்பிராய்.

□ எம். கே. எம். ஷகீப்
151, மசூதி வீதி
திருகோணமலை,

□ பி. வி. ஜெகதீஸ்வரன்
102, தவசிங்கராமமாவத்தை
கொழும்பு-15.

**பாராட்டுப் பெறும் கவிதைகளுக்குரியவர்கள்**

நெடுந்தீவு லக்ஸ்மண்
யாழூர் இளங்குயில்
அ. வேணுகோபாலன் - அத்தியடி
ஸ்ரீரதி பரமசிவம் - தெல்லிப்பழை
ஞா. கு. சோபியாலினி - உரும்பிராய்
யதார்த்திகா - கிளிநொச்சி
மீசாலையூர் கமலா
S. P. D. சுமதசாந்தினி - பலாலி
சுமதி - இணுவில்
ச. சந்தியா - திருகோணமலை
ஐ. சாந்தினி - வசாவிளான்
ப. இ. அனற்ரா கிறிசாந்தினி - இளவாலை
வை. க. தவமணிதாசன் - நாரந்தனை
சு. விஜயலட்சுமி - கொக்குவில்
கு. சத்தியேந்திரா - கொக்குவில்
ஏ. எஸ். மனோகரன் - காரைநகர்
உ. அனுத்தமா - நல்லூர்
ரவி - பரந்தன்
சு. ஸ்ரீகுமரன் - சுண்ணாகம்
தமிழினி சண்முகநாதன் - சாவகச்சேரி
கு. திவாகரன் - வண்ணார்பண்ணை
தேவி பரமலிங்கம் - வண்ணார்பண்ணை

உள்ளம்

மதி 1

பிறை 9


வெள்ளை நிறப்பூவுமல்ல;
வேறெந்த மலருமல்ல;
உள்ளக்கமலமடி
உத்தமனார் வேண்டுவது

- படைப்புகளிற்குப் படைப்பாளர்களே பொறுப்பு.
- உங்கள் காத்திரமான படைப்புகளையும் ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் அனுப்பி வையுங்கள்.
- எமது அலுவலக முகவரி


'உள்ளம்'
ஆசிரியர் குழு.
வளர்மதி சனசமூக நிலையம்
சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்.


## தேவையெனில் . . . . .

இதுவரை வெளிவந்த—உள்ளம் —யூன், யூலை, ஓக-செப், ஒக் – நவம், இதழ்கள் தேவைப்படுவோர் 22/= காசுக்கட்டளையை எமது அலுவலக முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒக்ரோபர், நவம்பர் இதழின் அட்டைப்படப்போட்டிக்கான பரிசுக் கவிதை

## இந்த மெழுகுவர்த்தி எரியத்தான் செய்கிறது!

பெரியப்பாவும், பெரியண்ணாவும்
பிரேதமாய் போனார்கள்
குஞ்சுராசாவும் குண்டுக்கு இரையானான்
எனக்கு இனிமேல்
சீன வெடியும் - சித்திரப்பட்டாடையும்
வாண வேடிக்கையும் – வலம்புரிச் சங்கும்
வேண்டவே ... வேண்டாம்,

அப்பா அகதிமுகாமுக்கு
அரிசிக்குப் போகிறார்
அம்மா ஆஸ்பத்திரியில்
திரிபோஷா தேடுகிறா

நாயும் பூனையும்
நடுத்தெருவில் 'விளையாட
நான் மட்டும்
நான்கு சுவர்களுக்கிடையில்
இருள் திரையில் கரியாவதா ?

வீட்டுக்குள் எரிகின்ற
விளக்குத்தான் ஒடிந்தாலும்
நேற்றைக்கு வாங்கிய
நேரான மெழுகுவர்த்தி
நிச்சயமாய் எரியும் !

பூவுக்குள் தேனும்
நீருக்குள் மீனும்
பார்வைக்கு உடனே
யாருக்குத் தெரியும் ?

உன்னையும் அவனையும்
உறவு மறைத்தாலும்
என்னை
என்னால் பார்ப்பதற்கு
இந்த மெழுகுவர்த்தி
எரியத்தான் செய்கிறது !

— செ, ஞானராசா —

# கணைகள்

ஆசிரியர் குழு, 20·11·89'
உள்ளம்
தோழமைமிகு ஆசிரியர் குழுவிற்கு,

உள்ளத்தின் ஒக்ரோபர்/நவம்பர் 89 இதழ் கிடைக்கப்பெற்றேன். அதில் வெளிவந்திருந்த திரு. வி. ஆர். பரந்தாமன் அவாகளது சிறு கதை 'ஒரு பிடி அரிசி' மிகவும் அருமையாக இருந்தது. அவரது முதலாவது சிறுகதை இதுவென்றாலும் எடுத்துக் கொண்ட கருவும் அமைத்துக் கொண்ட முறையும் நன்றாக இருப்பதுடன் இதயத்தைத் தொட்டும் விட்டது.

''அரிசிதான் இண்டைக்குக் கிடைக்கப் போகிறதே ........ பின்னேரம் சம்பலோடை யாவது வயிராற 'சாப்பிடலாம்......' என்ற மருதமுத்துக் கிழவரின் எதிர்பார்ப்பும்; மினிவானிற்கு காசு கொடுக்க முடியாத நிலையில் அவரது அரிசி முட்டையுடன் அவரை விட்டுவிட்டு 'மினிவான்' பறந்து விடுகிற முடிவும் நெஞ்சை உலுக்கியது இத யத்தின் கண்ணீருக் கூடாக மருதமுத்துக் கிழ வரின் 'பிம்பம்' மங்கலாக இன்னும் தெரிந்து கொண்டேதான் இருக்கிறது.

P. சிவனேசன்
கோண்டாவில் மேற்கு,

உள்ளம் ஆசிரியர் குழுவினர்க்கு,
அன்புடன்,

தொடர்ந்து ஒரு ஒழுங்கில் மிகப்பிரயத் தனப்பட்டு அபாரமுயற்சிசெய்து வெளியிட் டும் தன் அடக்கமாக செயற்படுவதையிட்டு நிறைந்த மகிழ்வு.

நல்ல முறையில் தரமான காத்திரமான விடயங்களைப் பிரசுரிக்கிறீர்கள். சில கருத்து முரண்பாடுகளின் வெளித்தேறல்களும் இடையிடை பிறிடுகின்றது. யாரையும் வஞ் சம் தீர்க்காது, நேர்மையாக தொடர்ந்து எழுதுங்கள் அதை வரவேற்கின்றோம்.

மேலும் பல புதிய தகவல்களை உள்ளம் வெளிக் கொணரும் எனும் எதிர்பார்ப்பும் உண்டு. உள்ளம் தரம் கொண்டுவரும் போது மனந்திறந்து பாராட்டுவோம். தவறும்போது அதே மனதுடன் குறைகளையும் சுட்டிக் காட் டுவோம். ஏனெனில், தரமான சஞ்சிகையை வளர்க்க வேண்டிய பொறுப்புண்டு என்பதால்

நன்றியுடன்
எஸ். கருணாகரன்
லஷ்மி வாசா
இயக்கச்சி.

ஆசிரியர்களுக்கு,
''உள்ளம்'',

15-11-89

தீபாவளி சிறப்பிதழில் வீ. ஆர். பரந் தாமன் எழுதிய 'ஒருபிடி அரிசி' என்னும் சிறுகதை என் நெஞ்சைத் தொட்டது.

ஒரு கவிதை .. . ஏன் அதை வெளியி ட்டீர்கள்? எழுதியது யார்? தொலைவு இருப்பு என்ற சொற்களுக்கு முக்கியத் துவம் கொடுத்தே அது எழுதப்பட்டுள்ளது அதன் குறியீடு பற்றி விளக்கம் தருவீர் களா ?

தயாவின் அட்டைப்படம் சுப்பர்; உண்மை யைத் தேடும் 'உள்ளத்திற்குப் பொருத்த மானபடம். கடிதங்களை 'கணை' என்ற பெயரில் காட்டியது நன்று. 'கணை' பாயவேண்டிய இடத்தில் நிச்சயம் பாயும்


அன்புடன்
கா. குமாரதாஸன்
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

23-11-89

ஆசிரியர் அவர்கட்கு,

உள்ளத்தில் இடம்பெறும் ஒவ்வொரு அம்சங்களும் மணியானவை உள்ளம் வளர என் உளம் கனிந்த வாழ்த்துக்கள்.

இவ்வண்ணம்,
பொ. ரஞ்சன்
சென். தோமஸ் வி. கழகம்
நாகதாழ்வு,
மன்னார்.



## அட்டைப்பட ஓவியம் :
# இன்றைய முகங்கள் :

இம்மாத **உள்ளத்தில்** அட்டையை அலங்கரிப்பது ஈழத்தின் பிரபல ஓவியர் 'மாற்கு' அவர்களின் ஓவியம் – 'இன்றைய முகங்கள்'

அன்று, 'அகத்தில் எதுவானாலும் - புறத்தே மகிழ்வும், முறுவலும் கொண்ட முகங்கள். அந்த முகங்களை முகங்களுக்கு உரியவர்கள் கூட மறந்து போய் வெகுநாட்களாக, காலமாக ஆகிய நிலையில் ..........

இன்று அச்சமும், பீதியும், அவலமும், வெறுப்பும், விரக்தியும் ஒன்றேயாகி, அகமும் புறமும் ஒன்றையே சுட்டும் 'மனிதம்' உறைந்து விட்ட முகங்கள்.

□ □ □

மாற்கு: – நாடறிந்த ஓவியர். எளிமையும், தன்முனைப்பின்மையும் இவரது உயர்பண்புகள்.

Go to nature, Study nature
Take the essence of it and then create

என்ற பிரபல அறிஞர் paul Gauguinனின், ஆக்கல் சித்திரம் பற்றிய கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவர்.

□ □ □

ஜாமினிராய், பிக்காஸோ போன்ற ஓவிய விற்பன்னர்கள் தமது ஓவியத்தின் வீரியத்தைக் கிராமியக் கலைகளிலிருந்தும் பெற்றனர். இவர்களை மிகவும் மதிக்கும் மாற்கு, தாமும் பல கற்பனைகளையும், உருவங்களையும் கிராமியக் கலைகளிலிருந்தே பெற்றதாகக் கூறுகிறார்.

□ □ □

"நான் தேடுகின்றேன் ......... கண்டுபிடிக்கின்றேன் ......... கிறுகின்றேன் ..... நீங்களும் தேடுங்கள் ...... கண்டுபிடியுங்கள் ...... ரசியுங்கள்" இது மாற்கு அடிக்கடி சொல்லும் வார்த்தைகள்.

□ □ □

ஓவியம் தவிர சிற்பத்திலும் நவீன வெளிப்பாடுகள் பலவற்றை உருவாக்கியிருப்பவர்.

தேடலில் சதா உழன்று கொண்டிருக்கும் ஓவியர் 'மாற்கு' எம் மண்ணுக்கு பெருமை தேடித்தருபவர். அவரது ஓவியங்கள் நம் மண்ணின் அழியாக் கலைப் பொக்கிஷங்களாக பேணிப் பாதுகாக்கப்படவேண்டும்.

கருத்துக்கள் நன்றி:–
தேடலும் படைப்புலகமும்;

(மேலே காணப்படும் படம், ஓவியர் மாற்கு அவர்கள் தன்னைத் தானே வரைந்த ஓவியம்.)

## கன்னிப் பூக்கள்

நித்தம் பூத்திடும்
நித்திய கல்யாணி!
எப்போதுனக்குக் கல்யாணம்.

காவல் கெட்டு
போகங் கெட்டு
எந்நாளும்
மலர்ந்திடும்பூ நீ,
அந்த சூரிய மணாளன்
இறங்கி வருவானென்ற
நினைவில்,
காத்திருந்து, காத்திருந்து
சோகத்தில் வாடி
வயோதிபமாகி
மாலையில் மடிகிறாய்

சீதனத்தின் பிடியில்
சிக்கிவிட்டதாலோ
நீயும்
கல்யாணத்திற்கேங்கிடும்
நித்திய கல்யாணியானாய்?

உன்னைப் போன்றே
நித்திய கன்னிகளாய்
சீதனமின்றி
அடுப்பங்கரையில் பெருமூச்செறிந்திடும்
கன்னிகள் இங்கு
ஆயிரமாயிரம்

அவர்தம் பெருமூச்செல்லாம்
ஒரு மூச்சாகி
அனல் மூச்சாகிடும்
நாள் வரும்,
கீழ்த்திசை சூரியன்
செருக்குடன் உதித்திடும்
அந்நாளில்
நம் கவலைகள் தீரும்
கல்யாணி.

— ப்ரியதர்ஷினி


**ABTHEEN**

☐ நவநாகரீக
தையல் வல்லுனர்கள்

☐ தையல் உலகின்
முன்னோடிகள்.

**ஆப்தீன்**

5, Jummah Mosgue Lane,
Grand Bazzar,
JAFFNA.


My Grateful Thanks to Infant Jesus for the Miraculous favour Granted.

***

Thank you St. Jude for the f vours granted.

— S. FABIAN




# தலைமுறைகள்

— சாந்தன்

எதிரிலும் வலத்திலும் கண்ணுக் கெட்டிய தூரம் வயல் வெளி; வருடத்தில் பாதிநாட்கள் வரண்டு போய் பாலைவனங் களையும் ஸ்தெபிகளையும் கற்பனை பண்ணச் சௌகரியமாய்க் கோலங்காட்டுகிற வெளி.

தொலைவில், வயல் நடுவே, பத்திர காளியம்மன் கோவிலும் பக்கத்தில் தேர்க் கொட்டகையும். இங்கே இவர்கள் வகுப்பில் செய்கிற மாதிரியுருவங்கள் போல. கோவி லருகே ஓடுகிற தெரு கண்ணிற்படாது. ஆனால், இருந்திருந்து விட்டு அதில் போகிற வாகனங்கள் மட்டும் சவக்காரச் செப்பு களாய்த் தெரிகின்றன. வயல் வெளியின் முடிவில், பெருவரம்பாய் மீண்டும் பனைகள்

கல்லூரி மதிலோடு சணைத்துப் படர்ந் திருக்கின்ற வேம்பு மாடி ஜன்னல் வரை வந்திருக்கின்றது. எட்டித் தொடலாம் போலக் கொப்புகள், எப்போதும் காற்றி லசைந்தபடி. காற்று இங்கேவற்றாது வீசும். எல்லா நாளும் எல்லா வேளையும் ஓயாமல் சிலுசிலுக்கும். வெளிச்சத்திற்குக் கேட்க வேண்டியதேயில்லை. எந்த மழை மூட லிலும் மின் விளக்கே தேவைப் படாது- வரைதலுக்குக் கூட.

இதெல்லா வற்றிலும் முக்கியமானதும் இருந்தது; அமைதி. காற்றிலசையும் கிளை களுக்கும் இருந்திருந்து விட்டு எங்கோ கரையும் காக்கை களுக்குத் துணையாய் அவன் குரல்தான் அதனைக் குலைக்கும்...

சூழலோடி சைந்து போய், அடுத்த வகுப்பிற்கான பாடத்தை 'இரை மீட்டபடி இருந்தவன், படிகளில் மாணவர் ஏறிவரும் அரவங் கேட்டுத் தயாரானான். முதலாம் பிரிவுக்கு நிர்மாணத் தொழில் நுட்பம் இப்போது. பேச்சுக்களும் சிரிப்புக்களும் கரைந்து, காலடி ஓசைகளே நெருங்கின. வழமை போல் ஜெயக்குமாரின் தலை முதலில் தெரிந்தது–

''மோணிங் ஸேர்– – –''

''குட்மோணிங், உள்ள வாங்கோ–

எல்லோரும் வந்தமரும் வரை காத்திருந் தான்.

இந்த மட்டத்தில் கற்பிப்பதில் இரண்டு சவால்கள். பரீட்சையே குறியாய்! இதுவரை பழகியவர் களுக்கு,சுய சிந்தனையை ஆதார மாய்க்கொள்ள வேண்டிய பரப்புகளைப் பரி சயம் பண்ணி வைக்க வேண்டியிருக்கிறது. மற்றது, இவ்வளவு நாளும் – உயர்தர வகுப் போ, சாதாரணதர வகுப்போ வரை- தாய் மொழி மூலம் படித்திருப்பார்கள். இங்கே இப்போ ஆங்கில மொழி மூலம்.

எங்கள் நாட்களைப் போலில்லை இருபது வருஷத்தில் எவ்வளவு மாற்றம்

எவ்வளவு தான் முதலில் அறிமுகப் படுத்தி, பின்னர் குளிகைகளாகக் கொடுத் தாலும், மொழியையும் விளங்கி அது சுமந்து வரும் பொருளையும் புரிந்து கொள் தென்பது இவர்களுக்குக் கொஞ்சம் சிக்க லாய்த்தானிருக்கிறது, ஆரம்பத்தில்...

''தொடங்கலாமா? —'' – எழுந்து மு னால் வந்தான். இன்று டாம்ப் புரூஃபிங் கட்டிடங்களுக்கும், கட்டிடங்களுக்குள்ளும் ஈரலிப்பு ஏன் பாதகமானது? அது எவ்வெவ் வாறு ஊடுருவும்? எப்படி அவற்றைத் தடுப்

கலாம்? மூன்று அடிப்படைகளிலும் விளக்க வேண்டும்

அதற்கு முதல் ஆங்கிலம்.

''டாம்ப்- எண்டா என்ன?''

''அணைக்கட்டு..''

அது, டாம் . 'இது, ''டாம்ப்..'' - இரண்டு சொற்களையும் எழுதிக் காட்டினான்.... இரண்டாவதுக்கு என்ன அர்த்தம்?'' தானே சொல்ல வேண்டி வந்தது;

''ஈரம்,...ஈரலிப்பு சரி,'' புரூஃப்' எண்டா?

''நிறுவல்'' ...- கடைசி வரிசையிலிருந்த சுரேஷின் குரல்.

''நல்லது; அது ஒரு கருத்து. ஆனா இங்கே வேறு''.

''தடை என்று சொல்லலாம்... தடை காப்பு.....''

''அதுக்கொரு உதாரணம்?''

கேள்வியுடன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான்.

பதில் கூட அங்கே இருந்தது, இருக்கிறது, இருக்கும்- அநேகமாக எல்லோர் கைகளிலுமே கடிகாரம் நாலு விநாடிகள்,

''ஸேர்?...''- திரும்பினான். தண்ணீரா அதிர்ச்சியா?

''புலட் புரூஃப்'' □

□ □ □

## என்ன இது...!

பாழடைந்த இருட்டில்
பயங்கர உருவங்கள் அசையும்
ஆந்தைகள் அலறும்
வௌவல்கள் எச்சமிடும்

பல்லிகள் சொல்லும் !
பரிதவிப்புகளில்
பாம்புகள் பால்குடிக்கும்

பிணங்களைத் திண்டு
நரிகள் ஊளையிடும்
மனிதத்துவம் மட்டும்
மௌனமாய் போகும்

ஆலமரத்தின்
இலைகளும் துளிர்களுமாய்
ஊதல் காற்றில்
உதிரும்
விழுதுகள் கூட
நிலத்தைப் பார்த்து
ஏங்கும்

நெருஞ்சியின்
நெருக்குதல் குள்ளும்
பாலறுகுகள் துணிந்து வாழும்

குப்பை மேனிகளும்
கோரைப் புற்களும்
தரைகளை விட்டு நகரும்

நாயுருவிகள்
நாணலைப் போல
காற்றோடு ஒதுங்கும்

வெள்ளருக்கும்
கல்லறைகளும்
போட்டியாக முளைக்கும்

மரங்கள் கூட
மலர் வளையங்களுக்காகத்தான்
பூக்கும்

வெளிச்சத்தை தேடி .....
மெழுகு திரிகள்
உருகும்

உருகி முடிந்தவை
கல்லறைகளில்
உறங்கும்
என்ன இது ?
சவச்சாலையா . !
இல்லையில்லை
எனது தேசம்.

— சடாவதனன்

O சென்ற இதழ் தொடர்ச்சி .....

# தமிழில் இலக்கிய அமைப்பியல் - சில சிந்தனைகள்

கி.பி. 11ஆம் நூற்றாண்டில் உருவாகத் தொடங்கிய இந்த நிலை 19 ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து பேணப்பட்டு வந்தது. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வண்ணச்சாபம் தண்டபாணி சுவாமிகள் தமது அறுவகையிலக்கணம் என்ற நூலில் 'புலமையிலக்கணம்' என ஒரு பகுதி அமைத்துள்ளார். அதில் மேற்படி மொழிப் புலமைச் சிந்தனை தெளிவாக புலப்படக் காணலாம். இலக்கியம் படைப்பதில் முறையான பயிற்சி அவசியம் என்பது அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி காலப்பகுதியில் அணியிலக்கணங்களாக தண்டியலங்காரம் — மாறனலங்காரம் முதலியன எழுந்தன. தொல்காப்பியம் சுட்டிய உவமையணியை இந்நூல்கள் பலவாக விரித்துரைத்ததோடு இத்துடன் தொடர்புடைய பல்வேறு அணிகளையும் நுண்ணிய வேறுபாடுகளுடன் விரித்துரைத்தன. வடமொழி சார்ந்த அணிகள் பல தமிழுக்கு அறிமுகமாயின. இவ்வாறான அணிவகைகளின் பெருக்கமும் இலக்கிய ஆக்கத்திற்கு மொழிப்புலமை அவசியம் என்ற நிலையை வலியுறுத்துவதாகவே அமைந்தது.

இலக்கியம் யாருக்காகப் படைக்கப்படுகின்றது என்ற நோக்கமும் மேற்படி காலப் பகுதியின் இலக்கிய அமைப்பியலைப் பாதித்தது. கற்றவர்கள் கற்றவர்களை நோக்கிப் படைப்பது என்ற சிந்தனையே மேலோங்கி நின்றது, கம்பன் கூறுவது போன்ற

''முத்தமிழ்த் துறையின் முறை போகிய
உத்தமக் கவிஞர்......''

பெருமக்களே இக்காலப் பகுதியின் முக்கிய சுவைஞர்களாகத் திகழ்ந்தனர். அவர்களின் மதிப்பீட்டைக் கருத்திற்கொண்டே இலக்கியங்கள் ஆக்கப்பட்டன.

இதனால் மரபு பேணப்படுவது அவசியமாயிற்று, இதனால் கி. பி. 11ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டிறுதி வரையான காலப்பகுதியில் இலக்கிய அமைப்பியல் புலமைக் கோட்பாட்டாலும் மரபு பேணும் சிந்தனையாலும் வழி நடத்தப்பட்டது. இலக்கியக்கொள்கை நிலை நின்று நோக்கும்போது இதனைப் பொதுவாக உருவவியல் கொள்கைக் காலம் எனலாம். ஒட்டக் கூத்தரிலிருந்து மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளைவரை இக்காலப் பகுதியில் வாழ்ந்த பெரும் புலவர் பலரும் ஏதோ ஒரு நிலையில் மேற்படி கொள்கை நிலை நின்றோரேயாவர். இவர்கள் பாடிய பிரபந்தங்கள் பலவும் இவர்களது மேற்படி நிலையை வலியுறுத்துவனவாகும்.

☐ கலாநிதி நா. சுப்பிரமணியன் ☐

இவ்வாறு இலக்கிய அமைப்பியலிற் புலமைக் கோட்பாடும் உருவவியற் கொள்கையும் முனைப்புப் பெற்றிருந்த காலப் பகுதியில் இவற்றில் தம்மைப் பிணித்துக் கொள்ளாது தன்னுணர்வை வெளிப்படுத்த முயன்றோரும் புலமையாளரை வாசகர்களாகக் கொள்ளாமல் பொதுமக்களை நோக்கியவர்களுமான சில இலக்கியப் படைப்பாளிகளும் வாழ்ந்தனர். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர், குறவஞ்சி, பள்ளு கீர்த்தனை நாடக இலக்கியங்கள் முதலிய

வற்றைப் படைத்தவர்கள் இத்தகையோரே. இவர்களது இலக்கிய அமைப்பியலில் இசை ஊடகம் முக்கிய பங்கு வகித்தது. சித்தர்களின் பாடல்களிலும் இப்பண்பை அவதானிக்கலாம். அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து, வள்ளலாரின் அருட்பாக்கள் போன்றனவும் இப்பண்பின. நாட்டுப் புற மக்கள் மத்தியில் வழங்கிய உயிர்த்துடிப்புள்ள வாய்மொழி ஆக்கங்கள் மேற்படி இலக்கியங்களின் அமைப்பியலிற் செல்வாக்குச் செலுத்தின,

இவ்வாறு புலமைக் கோட்பாட்டுக்கும் உருவவியற் கொள்கைக்கும் புறம்பாக அவ்வப்போது புலப்பட்டு நிற்கின்ற இலக்கிய அமைப்பியற் சிந்தனையின் ஒரு வரலாற்று வளர்ச்சியாகவே மஹாகவி, சுப்பிரமணிய பாரதியாரின் இலக்கியப் புரட்சி அமைகிறது


"சுவை புதிது பொருள் புதிது சொற் புதிது" எனத் தனக்குத்தானே கட்டியங் கூறிக்கொண்டு வந்த அவன் ஓரிரண்டாண்டு மொழிப்பயிற்சியுள்ள, சாதாரண பொது மக்களுக்குத் தன் உணர்வை வெளிப்படுத்து பவனாக அமைந்தான். பொருண்மையில் முன்னர் பயிலாத தேசியம், முன்னர் பெரு வழக்குப் பெறாத சமூகவுணர்வு ஆகிய வற்றைமுதன்மைப்படுத்தி நின்ற அப்பெருங் கவிஞன் அவ்வுணர்வுகட்கு வடிவங்கொடுப்பதற்கு நாட்டுப்புற மக்களின் வாய்மொழியில் அமைந்த சிந்து, கண்ணி என்பவற்றைத் தேர்ந்து கொண்டவன். இவ்வாறு இலக்கிய அமைப்பியலிற் சிந்து யாப்புக்கு அவன் கொடுத்த முக்கியத்துவம் அவனைச் 'சிந்துக்குத் தந்தை' ஆக்கியது.

இலக்கிய அமைப்பியலிற் புலமைக் கோட்பாட்டைத் தகர்ப்பதிற் பாரதி மேற் கொண்ட பணி இந்த நூற்றாண்டில் தமிழிலக்கியம் புதிய பாதையிற் செல்ல வழி வகுத்தமை வரலாறு காட்டும் உண்மையாகும். தமிழ்க் கவிதை தனது மரபுரீதியான பா என்ற ஊடகத்தை விட்டு உரைநடை என்ற ஊடகத்திலும் பயிலத் தொடங்கிப் புதுக்கவிதை என்ற புதுவகைமை உருவாகியுள்ளது. இதன் தோற்றத்திற்குப் பல

> பலவீனர்களுக்குப் பாதையில் கிடக்கும் கருங்கல் தடையாக இருக்கலாம். அதுவே உள்ள உறுதி படைத்தவர்களுக்கு முன்னேற்றப் படிக்கல்லாக அமைகிறது,

காரணங்கள் கூறப்படினும் புலமைக் கோட்பாட்டையும் மரபையும் மீறும் அமைப்பியற் சிந்தனை அடிப்படையான முக்கிய காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

இன்றைய இலக்கியச் சூழலில் இலக்கிய அமைப்பியற் சிந்தனை புலமைக் கோட்பாடு என்ற அடிப்படையில் தொழிற்படவில்லை. அதாவது படைப்பவன் இன்ன தகுதியுடையவனாகத்தான் இருக்க வேண்டும் என்ற நிலை மாறிவிட்டது. உருவவியற் கொள்கையும் வலுவிழந்து விட்டது. சிற்சிலர் அந்தாதி, பிள்ளைத்தமிழ், ஊஞ்சல் முதலியன பாடுவதைத்தவிர. புனைகதை, கவிதை ஆகிய இன்றைய இலக்கியவகைககளில் ஒன்றன் அமைப்பைப் பின்பற்றி இன்னொன்றை ஆக்குவது என்ற நிலைக்கு இடமேயில்லை. அவை ஒவ்வொன்றும் தத்தம் அளவிற் புதுமைப் படைப்புகளாகும் பொழுதே கவனிப்பையும் கணிப்பையும் பெற முடியும். இவ்விலக்கியவகைகளுக்குக் கூறப்படும் இலக்கணங்கள் மிகப்பொதுவான சில முக்கிய பண்புகளைச் சுட்ட முடியுமே தவிர வரைவிலக்கணங்கள் ஆகிவிடமுடியாது. இந்த நிலையில் ஒரு படைப்பாளியை வழிநடத்தி நிற்கக்கூடிய அமைப்பியற் சிந்தனை என்ன? என்ற வினா எழுகின்றது. தான் அடைந்த அனுபவத்தை அல்லது உணர்த்த விழைந்த செய்தியை நுண்ணுணர்வுள்ள வாசகனுக்குத் தொற்றவைக்க ஏற்ற வலுவுள்ள சொற்களால் அவ்விலக்கியம் அமைக்கப்பட வேண்டும். இதில் அப் படைப்பாளி காட்டும் திறனே அவரது இலக்கியத்தின் தரத்தையும் இலக்கிய வரலாற்று வாழ்வையும் தீர்மானிப்பதாகும் என்பதே அந்த வினாவுக்கான விடையாகும். □



## 16-09-1989

அந்தப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் நடாத்திய சிறுகதைப் போட்டிக்கு நானும் ஒரு கதையை அனுப்பியிருந்தேன். அது தான் நான் முதன் முதலில் எழுதிய போட்டியாக இருக்க வேண்டும்.

மாதங்கள் சில கழிந்த பின்னர் எழுத்தாள நண்பரிடம் இருந்து கடிதம் ஒன்று வந்தது. ''போட்டிக்கு நீர் அனுப்பிய கதை'' ...... '' சஞ்சிகையில் பிரசுரமாகியுள்ளது. கதையின் பெயரும் மாற்றப்பட்டுள்ளது''

எதிர்பாராத அதிர்ச்சி என்றாலும் கூட ஆழமாகச் சிந்திக்கும் தன்மை அப்போது எனக்கு இருக்கவில்லை என்று தான் நினைக்கிறேன்.

போட்டி நடாத்தியது பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம். சங்கத்திற்கும் அந்த எழுத்தாள நண்பருக்கும் என்ன தொடர்பு? என்ற யோசனை கூட அப்போது எனக்கு ஏற்படவில்லை என்பதை இப்போது நினைத்துப் பார்க்க வெட்கமாக உள்ளது.

அதைவிட வேடிக்கை என்னவென்றால் குறிப்பிட்ட போட்டி முடிவு பின்னர் வெளியான போது எனது நண்பரான அந்த எழுத்தாளருக்கே முதற் பரிசு கிடைத்திருந்தது.

சில காலம் கழிந்த பின்னர் அந்த நண்பர் என்னிடம் வந்திருந்தார். சிறுகதைப் போட்டி ஒன்று வருகுது மச்சான் கட்டாயம் எழுது. எனக்குத்தான் முதற்பரிசு உனக்கு இரண்டாம் பரிசு கிடைக்கும்'' என்று கதையோடு கதையாகச் சொன்னார்.

நான் அவர் சொன்னதை பகிடியாகத்தான் நினைத்தேன். பின்னர் போட்டிக்கும் எழுதினேன். முடிவுகள் வந்த போது நண்பர் முதற் பரிசு பெற்றிருந்தார். எனக்கு இரண்டாம் பரிசு. அதில் அறிவிக்கப்பட்ட பரிசுப்பணம் கூட என் கையிற் கிடைக்கவில்லை.

## - வாகு லேயன் -

பின்னரும் பல பரிசுகளை அந்த நண்பர் பெற்றார். ஆனால் பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் நடந்த அந்தச் சம்பவம் எனக்கு மீண்டும் இன்று நினைவுக்கு வந்தது.

## 07-10-1989

நேரம் பிற்பகல் இரண்டு மணி இருக்கும். வெய்யிலின் கொடுமை சற்றேனும் குறையவில்லை. காற் பாதங்களை அழுத்தமாக வைத்து நடக்க முடியாத வெம்மை.

என்றாலும் மண்ணோடு போராடும் அந்தப் பாமர மக்கள் வெகு நிதானமாக நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

நான் இருந்த இடத்தில் இருந்து பார்க்கும் போது கண்ணுக்கெட்டிய தூரம் வரை அவர்கள் தோட்டங்களில் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

நான் சந்திக்கக் காத்திருந்த அலுவலர் இன்னமும் வந்த பாடில்லை. என்னைப் போலவே வேறு பலரும் பழி கிடந்தனர்

அலுவலரின் உதவியாளர் எனக்கு மிக நன்றாக தெரிந்தபடியால் விசேட விருந்தினராக உள்ளே கதிரையில் அமரும்பாக்கியம் கிடைத்திருந்தது. இல்லையேல் பழி கிடக்

கும் ஏனையவர்களுடன் வாசற்படிதான் தஞ்சம்.

தெருவில் அந்த வயதான பெண்மணி வெறுங்காலுடன் தள்ளாடித் தள்ளாடி இயலாமையினால் நடந்துவந்தார். பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

அலுவலரின் அந்த இடத்தின் வாசலுக்கு வந்து சேர வெகு நேரம் எடுத்தது. சனங்களை விலத்திக் கொண்டு மெதுவாகப் படியேறினார்.

அலுவலரின் உதவியாளர் சட்டென்று எழும்பினார்.

'' என்னணை எடுத்தாச்சே '' என்ற குரலில் எதுவித பாவமும் இல்லை.

களைத்துப் போயிருந்த அந்த வயதான பெண் கதைக்கக் கூட கஷ்டப்பட்டார்''. ''இஞ்சாலை வாணை காசெடுத்த புழுகத்தில கதைக்கக்கூட பஞ்சியே '' என்றார் உதவியாளர்.

சேலைத் தலைப்பை அவிழ்த்து ஒரு பெரியதாளை அந்தப்பெண் கொடுக்க அவரும் வாங்கிக் கொண்டார். நிட்சயமாக ஐநூறு ரூபாய்தான். ஆயிரம் ரூபாய் நிவாரணப்பணத்தில் ஐநூறு ரூபாய் சன்மானம். பெண்ணின் முகத்தைப் பார்க்கச் சங்கடப்பட்டு தலையைக் குனிந்து கொண்டேன் □


## சந்தா விபரம்

ஓராண்டு சந்தா: ஐம்பத்தைந்து ரூபா
அரையாண்டு சந்தா: முப்பது ரூபா
(தபால் செலவுகள் தனி)
சந்தா அனுப்புவோர்:
செ. செல்வக்குமார்
வளர்மதி சனசமூக நிலையம்
செம்பியன் லேன்
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்.
என்ற முகவரிக்கு காசுக்கட்டளையாக அனுப்பவும்.


# விழித்தல்

விடுதலை

* * *

மேடைகள் உதறிய வார்த்தைகளை
பொறுக்கி விழுங்கிவிட்டு;
உதடுகளில் மட்டும் முழங்கிக்
கொண்டு
விறைத்துக் கிடந்தோம்
உறுப்புள்ள ஊனர்களாய்

* * *

புயலொன்று வீசி
எம் முதுகுகள் படபடத்தபோது தான்
எல்லோருக்கும் புரிந்தது
எமக்கும் சிறகுகள் இருப்பது.

* * *

விரித்துப் பார்த்தோம்
ஆனாலும்
பறப்பதற்கு நாதியின்றி
வீழ்ந்து போனோம்

* * *

''என்ன செய்வது,''
எமக்குள் ஏக்கம்-
என்ன செய்வது?
எமக்கு
விமோசனமில்லா சாபக்கேடா என்ன
விரித்த சிறகுகளில்
விழுந்திருந்த ஓட்டைகள் ?

* * *

எல்லாம் எம் கையில் தான்!

* * *

ஏன் வந்தன
இந்த ஓட்டைகள்?
எங்கிருந்து வந்தன?
எப்படி வந்தன
என்றெல்லாம் கேட்பது,
விழிப்பது;
ஓட்டைகளை அடைப்பது
சிறகுகளை விரிப்பது
எல்லாமே எம் கையில் தான்!

* * *

இனி
சுதந்திர வானில்
சுதந்திரமாய்ப் பறக்கிற விதியும்
எம் கையில் தான்!

— எஸ். பி. சிவனேஷ்

☐ வங்காள மொழிச் சிறுகதை

# எல்லை

☐ மூலம்:- மனோஜ் வசு

☐ தமிழில்:- சு. கிருஷ்ணமூர்த்தி

கேட்ட கதைமாதிரிஇருக்கும்; ஆனால் முற்றிலும் உண்மை. இஸ்மாயிலின்வீட்டின் முன்பக்கம் பாகிஸ்தானிலும் பின்புறத் தாழ்வாரம் இந்தியாவிலும் விழுந்தது. அவர்கள் இரண்டு பேர்கள் தான். புருஷனும் மனைவியும்.

இப்பொழுது இஸ்மாயில் முழுக்க முழுக்கப் பாகிஸ்தானி. அவனை இனி யாரும் ஒன்றும் சொல்லமுடியாது.

அவன் இன்னும் ஒரு காரியத்தை இரகசியமாகச்செய்து முடித்தான். பழைய தாழ்வாரத்தில் பூமிக்கடியில் புதைத்து வைத்திருந்த சட்டியை இரவோடிரவாகத் தோண்டி எடுத்துப் புதிய தாழ்வாரத்தில புதைத்து வைத்தான்.

இஸ்மாயிலுக்கு ஏற்பட்ட நிலை இன்னும் பலருக்கு ஏற்பட்டது. அவரவர் அவரவர்களுக்கு ஏற்ற ஏற்பாடுகளைச் செய்து கொண்டார்கள். அவர்கள் தலை முறை தலை முறையாக அக்கம் பக்கத்துக்காரர்களாக வாழ்ந்தவர்கள், அவர்களிடையே எவ்வளவு நெருக்கம் இருந்து வந்தது! ஆனால் திடீரென்று ஏதோ ஒரு மாயம் நிகழ்ந்துவிட்டது. இப்போதும் அவர்களிடையே சந்திப்பும் பேச்சு வார்த்தையும் உண்டுதான்: ஆனால் முன்பிருந்த நெருக்கமும் பரஸ்பரமும் அன்பும் அடியோடு மறைந்து விட்டன. கண்ணுக்குத் தெரியாத வேலி ஒன்று அவர்களிடையே விழுந்து விட்டது.

ஒரே ஊர் இரண்டாகப் பிரிந்துவிட்டதே, இதென்ன மாயம்! ஊரில் உள்ள கிழவர்களால் இந்த மாறுதலை நம்ப முடியவில்லை. ''ஆனால் ஒரு பக்கத்திலிருந்து வரும் காற்று இன்னொரு பக்கம் வீசாமல் தடைசெய்ய முடியவில்லையே: அதைத் தடுக்க ஒரு சுவர் கட்டட்டுமே, பார்க்கலாம் என்றார்கள் அவர்கள்.

சுவர் கட்டப்படவில்லை தான். ஆனால் இருபுறமும் மரங்கள் அடர்ந்த சாலையில் ஒரு புளிய மரத்தில் ''பி'' என்ற எழுத்தை செதுக்கிவைத்தார்கள். அந்த இடத்திலிருந்து பாகிஸ்தான் ஆரம்பமாவதைக் குறிக்க இந்த அடையாளம். அதற்குச் சற்றுத் தூரத்தில் இருபுறமும் போலீஸ்காரர்களும், சுங்க அதிகாரிகளும் கூடாரம் அடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். ரஸ்தாவில் செல்லும் மனிதர்களும் வண்டிகளும் கூடாரங்களுக்கெதிரே நிறுத்தப்பட்டுச் சோதிக்கப்பட்ட பிறகே மேலே செல்ல அனுமதிக்கப்பட்டன,

பாகிஸ்தானில் விழுந்த பகுதியின் பெயர் கேஷ்டோபூர்; இந்தியப் பகுதியின் பெயர் ராதா நகர். ஒன்றாக இருந்த கிருஷ்ணனையும் ராதையையும் இப்போது அரசியல் பிரித்துவிட்டது. அந்தக் கிராமங்களின் மக்கள் கூடார அதிகாரிகளின் ஆர்ப்பாட்டங்களைக் கண்டு திகைத்துப் போனார்கள். கிராமப் பெரிய மனிதர்களுக்கு முன்பெல்லாம் இருந்த செல்வாக்கு இப்போது இல்லை. அவர்களை யாரும் சட்டை செய்வதில்லை. ஊரில் பலவித வதந்திகள் பரவிக் கொண்டிருந்தன.

மஞ்சு ஒரு நாள் அதிகாலையில் வந்து இஸ்மாயிலின் வீட்டுக்கதவைத் தட்டினாள். ''விடிஞ்சு எவ்வளவு நேரம் ஆச்சு? இன்

னுமா தூக்கம்? இஸ்மாயில்அண்ணா! எழுந்திரு, எழுந்திரு! நான்தான் மஞ்சு!''

''விடிவெள்ளி இன்னும் வானத்துலே இருக்கு அதுக்குள்ளே ரொம்ப நேரமாயிடிச்சாமே! உளர்றா ..'' என்றுமுணுமுணுத்துக் கொண்டே இஸ்மாயில் வெளியே வந்தான். ''என்ன இப்படி மொறச்சுப் பாக்கிறே, அண்ணா? மச்சினனும் அவன் பெண்டாட்டியும் என்னை வெரட்டிட்டாங்க. எனக்கு இந்த ஊரை விட்டா வேறே கதியில்லை''

''வந்தது எப்போ ?''

மஞ்சுவுக்குக் கோபம் வந்து விட்டது. ''உனக்கு என்ன வந்திடிச்சு அண்ணா? கிறுக்குப் பிடிச்சுடுச்சா? எங்கிட்ட இவ்வளவு மரியாதை எதுக்கு? வந்தது எப்போ, வாம் கேள்வியைப் பார் கேள்வியை.

இஸ்மாயில் பதில் சொல்லாமல் அவளைத் தாண்டிப் போய் விட்டான், ஆனால் மஞ்சு அவனை விடவில்லை.

''நீ என்னை 'வா'ன்னு அழைக்கல்லே! வழக்கம் போல் செல்லமா திட்டல்லே! இந்த ஸ்மசானத்துக்கு ஏன் வந்தேன்னு கூடக் கேக்கல்லியே அண்ணா ?''

இஸ்மாயில் முகத்தைத் திருப்பிக் கொண்டு உலர்ந்த குரலில் பதில் சொன்னான்: ''இந்த ஊரைஏன் ஸ்மசானங்கிறே? இங்கே யாரும் யாரையும் பட்டணத்திலே செய்யற மாதிரி மண்டையை உடைச்சுக் கொல்லலியே''!

''காயஸ்தத் தெரு முழுவதும் பார்த்திட்டு வந்துதான் ஸ்மசானம்னு' சொல்றேனாக்கும்! ஒருத்தரும் ஒருத்தரையும் அடிச்சுக் கொல்லலேண்ணா. அவங்க எல்லாரும் எங்கே போயிட்டாங்க? வீடுங்களெல்லாம் பேய் வாழற பாழ் மண்டபம் மாதிரின்னா இருக்குது!''

மஞ்சுவின் உதடுகள் உணர்ச்சி மிகுதியால் துடித்தன. அவள் யாரும் கவனியாத வண்ணம் தன் கண்களில் துளித்த நீரை இடதுகையால் துடைத்து விட்டுக் கொண்டு கெஞ்சும் குரலில் சொன்னாள்: ''நான் இப்படியே நின்னுக் கிட்டுத்தான் இருக்கணுமா அண்ணா? என்னை உட்காரக் கூடச் சொல்லமாட்டியா ?''

அவளுடைய குரலைக் கேட்டு இஸ்மாயிலின் மனைவி காமரன் வெளியே வந்தாள் அவள் சொன்னாள். ''ஏன் இப்படிப் பேசறே மஞ்சு? இந்த வீட்டிலே உன்னை வரவேத்து ஆசனம் கொடுத்து உட்காரச் சொல்லணுமா?''

மஞ்சு புகார் செய்தாள். ''பின்னே பாரேன் அண்ணி! அண்ணன் எப்படி மாறிட்டான்! நான் ஏதோ வேத்து மனுஷி மாதிரி எங்கிட்ட பேசறானே!''

''அவர் கிடக்கிறார் போ, நீ செருப்பை கழட்டிட்டு உள்ளே வா!'' காமரன் மஞ்சுவைத் தேற்றி உள்ளே அழைத்துச் சென்றாள்.

மஞ்சுவுக்கு மிக்க மகிழ்ச்சி. ''இந்தச் சுடுகாட்டிலே நீ ஒருத்தி தான் உசிரோட இருக்கே, அண்ணி! நல்ல வேளை நான் பிழைச்சேன்! அண்ணன் இருக்கிற இருப்பைப் பார்த்து இது அவன்தானா அவனோட ஆவியான்னு பயந்து போயிட்டேன் நான்!'' பல் துலக்க வேப்ப மரத்தில் குச்சி ஒடித்துக் கொண்டிருந்த இஸ்மாயிலை ஒரு தடவை திரும்பிப் பார்த்துவிட்டு மஞ்சு தொடர்ந்து பேசினாள்.

''அண்ணனுக்கு என்ன வந்திடுச்சு அண்ணி? அவன் முகம் போற போக்கைப் பார்த்தா என்னைக் கன்னத்துல அறைஞ்சுடுவான் போல இருக்கே?'' அங்கு நிலவிய இறுக்கமான சூழ்நிலையைத் தன் பேச்சால் மாற்றி விடுவது தான் அவளுடைய நோக்கம். ஆனால் ஏற்பட்ட விளைவோ அதற்கு நேர் மாறானது தான்.

இஸ்மாயில் கைமுஷ்டியை மூடிக்கொண்டு சீறினான்: ''ஆமாம் உன்னை அறையணும் போலதான் இருக்கு எனக்கு. ஒரு அடியிலே உன்மண்டையைச் சிதற அடிக்கணும் போலே இருக்கு!''

காமரனுக்கு எரிச்சல் வந்தது. "சீ, என்ன பேச்சு இது? கலகம் செய்தவங்கள் ளாம் நழுவி விட்டாங்க. அவங்களை ஒன் னாலே ஒண்ணும் செய்ய முடியல்லே! நம் மைச் சேர்ந்த மனுஷி நம்ம வீட்டுக்கு வந் திருக்கா! அவகிட்ட ஒன் சூரத்தனத்தைக் காட்டுறியே, என்ன ஆம்பிளே நீ!"

இஸ்மாயில் சொன்னான்; "இது தான் இப்போ சட்டம் தெரியுமா? இப்போ எல் லாம் வித்தியாசம் மனுஷனைப் பொறுத்த தில்லே, மதத்தைப் பொறுத்தது — இந்து முஸ்லிம். ஒரு மதத்துக்காரன் வேறு மதத் துக்காரனை அடிக்கணும், கொல்லணும், பழி தீர்க்கணும்!

மஞ்சு சொன்னாள்; "ரொம்ப சரி அண்ணா! என் மண்டையை ஒடைச்சிடு! ஒன் மேலே ஆணை! என் மண்டையைஒடைச் சிடு! இவ்வளவு நம்பிக்கையோடே நான் ஒன் வீட்டுக்கு வந்தேனே, எனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்!"

உடல் துடிக்கத் துடிக்க அவள் இஸ்மா யிலிடம் ஓடி வந்தாள். காமரன் அவளைத் தடுத்து நிறுத்தினாள். அப்படியும் மஞ்சுவின் ஆவேசம் அடங்கவில்லை. அவள் தூணில் தலையை முட்டிக்கொள்ள ஆரம்பித்தாள்.

சிறுவயதிலிருந்தே அவள்குணம் அப்படி. அவளுக்குக் கோபம் வந்து விட்டால் தலை கால் தெரியாது. இதனால்தான் அவளால் புக்ககத்தில் காலம் தள்ள முடியவில்லையோ என்னவோ?

காமரன் அவளைத் தேற்றினாள். "இதுக்காக வருத்தப்படாதே, மஞ்சு! ரம் ஜான் செத்துப் போனப்புறம் இப்படித் தானிருக்கார் உங்கண்ணன். சில சமயம் என்மேலே எரிஞ்சு விழுகிறார். நான்தான் போக்கிடம் இல்லாமே தவிச்சுக்கிட்டு இருக் கேன்"

இஸ்மாயிலின் குடும்பம் வசதியோடு வாழ்ந்தது. கொல்லையில் மாடுகள், குதிர் நிறைய நெல். இஸ்மாயில் தன் வருமானத் தில் வீட்டைப் பழுது பார்த்தான். ரம்ஜான் அவனுக்கு ஒரே பிள்ளை. ரம்ஜானை நன் றாகப் படிக்கவைத்து அவனை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்று இஸ்மாயிலுக் குக் கொள்ளை ஆசை. காமரனின் அப்பா பட்டணத்தில் வக்கீல். ரம்ஜான் அவரிடம் தங்கியிருந்து கொண்டு பள்ளியில் படித்து வந்தான்.

திடீரென்று ஒருநாள் அந்தச் செய்தி வந்தது: மத வெறியர்கள் ரம்ஜானைத் தடி யால் அடித்து அவன் மண்டையைப் பிளந்து விட்டார்களென்று. இரண்டு மாதங்கள் பட் டணத்து ஆஸ்பத்திரியில் அவனுக்கு சிகிச்சை செய்துவிட்டு அவனை ஊருக்கு கொண்டு வந்தான் இஸ்மாயில். படிப்பும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் பையன் உயிரோடிருந் தால் போதுமென்றாகி விட்டது அவனுக்கு.

ரம்ஜான் சிறு வயதிலிருந்தே ரொம்பச் சூடிகை. அந்த ஊர்த் திண்ணைப் பள்ளிக் கூடத்து வாத்தியார் ஹரீஷ் பண்டிதர் வாய் ஓயாமல் ரம்ஜானின் புத்திசாலித்தனத்தை புகழ்வார். அப்படிப்பட்ட பையன் இந்த விபத்துக்குப்பிறகு அதிகம் பேசுவதேயில்லை. கண்களை உருட்டி, மலங்கமலங்க விழிப்பான். தனக்குப்புரியாத இந்த கொடுமை நிறைந்த உலகத்தைப் பார்த்துக் குழம்புவான்; திடீ ரென்று கத்துவான்.

"ஐயோ, அப்பா அதோ வாராங்களே! எனக்குப் பயமாயிருக்கே!" கத்திக் கொண் டே எழுந்து ஓட முயற்சி செய்வான். ஒரு நாள் இப்படித்தான் ஓடிப்போய் மொட்டை மாடியிலிருந்து கீழே விழுந்துவிட்டான். ஏற்கனவே உடைபட்டிருந்த மண்டையில் மறுபடியும் அடிபட்டு ரத்தம் ஆறாகப் பெரு கிற்று, பையனுக்கு நினைவு தப்பிவிட்டது. சற்று நேரத்துக்கொருமுறை அவனுக்கு நினைவு திரும்பும் போதெல்லாம் அவன் "தண்ணீர்! தண்ணீர்!" "என்று கத்துவான். மரண தாகம் ஏற்பட்டு விட்டது அவனுக்கு. உலகத்தில் உள்ள கடல், ஆறு, குளம் எல்லா வற்றின் தண்ணீரையும் குடித்துத் தீர்த்தா லும் தணியாத மரணதாகம் அவனுக்கு. இரண்டு நாட்களில் அவனது உயிர் பிரிந்து போய் விட்டது......

ரம்ஜான் இறந்த நினைவு வரும் போதெல்லாம் இஸ்மாயிலுக்குத் தலை சுற் றும், மூளை குழம்பும்; அப்போது அவன் மிருகமாக ஆகிவிடுவான்...

மஞ்சு காமரனைக் கேட்டாள்; "என் அப்பாவைப் பற்றி ஏதாவது சேதி தெரியுமா"? "தெரியாதம்மா" சொல்லும்போது காமரனுக்குத் தொண்டையை அடைத்தது. "அவரை அடிச்சுக் கொன்னுட்டாங்களா"?

"இல்லை, இல்லை! இந்தப்பக்கததிலே கத்திக் குத்து கொலை இதெல்லாம் ஒண்ணும் நடக்கல்லே, ஆனால் இதெல்லாம் இல்லாமலேயே அவங்க அணு அணுவா செத்துக்கிட்டு இருந்தாங்க. அப்புறம் திடீர்னு எங்கேயோ போயிட்டாங்க. எங்கே போனாங்களோ தெரியாது".

தலைமுறை தலை முறையாக அந்தச் சுற்றுவட்டாரத்தில் வசித்துவந்த மஞ்சுவின் அப்பா, அவரைப் போன்ற இன்னும் பலர் இவர்களுடைய நினைவு காமரனின் மனத்தைக் கலக்கியது. மஞ்சுவின் அப்பாவாவது தனிக்கட்டை; அவர் எப்படியோ போகட்டும். ஆனால் பெண்டாட்டி, பிள்ளை குட்டிகளுடன் ஓடினார்களே, மற்றவர்கள் நிலை என்ன? பாவம், அவர்கள் எங்கே அகதிகளாய் அலைகிறார்களோ!

"சுத்தப் பயந்தாங் கொள்ளிகள்! சொந்த ஊரைவிட்டு, சொந்த வீடுகளை விட்டு ஓடிட்டாங்களே! இங்கேயே தங்கியிருக்கத் திராணியில்லே!" மஞ்சு சொன்னாள்.

"அவங்களைக் குத்தம் சொல்லாதே மஞ்சு! சொந்தமண்ணைவிட்டுவிட்டுப்போக யாருக்கும் இலேசா மனசு வந்திருக்குமா? எவ்வளவு கஷ்டம் வந்திருந்தால் எல்லாத்தையும் துறந்திட்டு நாடோடியா ஓடியிருப்பாங்கண்ணு யோசிச்சுப்பாரு[ களவாணிப் பசங்க மாதிரி ராவோட ராவா ஓடினாங்களே அதை நினைக்க நினைக்க என் வயிறு எரியுது, மஞ்சு!"

"ஆனால் நான் இங்கே நான் இருக்கப் போறேன், அண்ணி! நான் ஓடிப்போக மாட்டேன். எனக்கு போக்கிடம்எங்கே! சொல்லு? அண்ணன் கிட்டே சொல்லி என் வீட்டிலே ஓர் அறையை ரிப்பேர் பண்ணிக்கிறேன். அதுக்குக் கூட என்ன அவசியம்? நான் ஒண்டிக்கட்டை; எனக்கு உன் வீட்டிலே இடமில்லையா? வேண்டப்பட்ட மனுஷங்களோடயே இருந்துட்டு ஒருநாள் சாகிறேனே! பிச்சைப் பாத்திரத்தை எடுத்துக்கிட்டு, ஊர் ஊரா அலைஞ்சுக்கிட்டு அவமானப் படுறதைவிடச் சொந்த ஊரிலே சாகிறது மேல் இல்லையா?"

"சரி, சரி வம்பளந்தது போதும், குளிச்சிட்டுச் சமையலுக்கு ஆகவேண்டியதைப் பார்!" இஸ்மாயில்மஞ்சுவை அதட்டினான். மஞ்சு சோம்பல் முறித்துக் கொண்டு பதில் சொன்னாள்; "ஆமா என் ஒருத்திக்காகச் சமையல் செஞ்சிக்கணுமாக்கும்! எனக்குஞ் சேர்த்து நீ சமையல் செய்யமாட்டியா, அண்ணி? என்னைப் பட்டினி போட்டு விட்டு நீ மட்டும் சாப்பிடுவியா?"

காமரன் தயங்கினாள்; முன்பெல்லாம் உனக்குச் சமைச்சுப் போட்டிருக்கேன். நீயுந்தான் சாப்பிட்டிருக்கே! ஆனால் இப்போ உன் புருஷன் செத்துப் போயிட்டான். எங்க சமையலைச் சாப்பிடலாமா நீ? ஊரிலே உள்ளவங்க என்ன சொல்லுவாங்க?" மஞ்சு பதில் சொல்லுமுன் இஸ்மாயில் குறுக்கிட்டான். "மகாராணி சமையல் செஞ்சு சாப்பிட மாட்டாளோ? சரிதான் சமையல் செஞ்சு சாப்பிட்டால் சாப்பிடட்டும், இல்லேன்னா பட்டினி கிடக்கட்டும் ஆமாம்!"

இஸ்மாயில் கோபமாகப் பேசினால் அவனுககுத் தணிந்துபோகும் வழக்கம் மஞ்சுவுக்குக்கிடையாது. "சரி அப்படியே பட்டினி கிடக்கிறேன்! ஒரு சொட்டுத் தண்ணி கூட குடிக்காமல் இருக்கிறேன் அவ்வளவு தானே?"

இஸ்மாயில் முணுமுணுத்தான் "மகாராணி அம்மாவுக்குச் சமையல் பண்ணி வாயிலே ஊட்டணுமாம்! அப்பன்காரன் எங்க தலைமேலே ஏறி உட்கார்ந்துக்கிட்டு அதிகாரம் பண்ணினான்! பொண்ணுக்கும் அந்தக் குணம்தானே வரும்...... ஆனால் இது பாகிஸ்தானாக்கும், ஞாபகம் இருக்கட்டும், இங்கே உங்க அதிகாரமெல்லாம் செல்லாது".

"சீ, இதென்ன உளறல்!" காமரன் தன் கணவனைக்கண்டித்தாள்." சின்ன வயசிலேயிருந்து மஞ்சு நம்ம வீட்டிலே சாப்பிட்டு

வந்திருக்கா! நீயே எவ்வளவு தடவை அவளுக்கு சோறு ஊட்டியிருக்கே! அதனால் தான் அவள் அப்படிச் சொன்னாள்!

''அதெல்லாம் இனிமேல் நடக்காது! நன்றிகெட்ட கும்பல் இது! கடைசியிலே நாம் இவளுக்கு விஷம் கொடுத்ததா புகார் பண்ணினாலும் பண்ணுவா! அப்புறம் என் கையிலே விலங்கு மாட்டுவாங்க!

கல்லறைகள் இருந்த பகுதியை நோக்கி நடந்தான் இஸ்மாயில்.

நள்ளிரவு, எங்கும் அமைதி, இஸ்மாயிலுக்கு மட்டும் அமைதி இல்லை. இன்னும் ரம்ஜானின் குரல் அவனை அலைக்கழிக்கிறது. தாழ்வாரத்தில் படுத்திருந்த அவன் உறக்கம் வராமல் இங்கு மங்கும் புரண்டான். மெல்ல எழுந்து உள்பக்கம் எட்டிப் பார்த்தான். காமரனும் மஞ்சுவும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள்,

இப்போது இஸ்மாயில் மட்டும் தனியாகத்தான் இருக்கிறான், இல்லை, இல்லை. அவன் தனியாக இல்லை, அவனுக்குத்துணை மோகராக்கள்; அவன் கையைக்கட்டி வாயைக் கட்டிச் சேமித்து வைத்துள்ள மோகராக்கள்.

அவன் என்றாவது ஒரு நாள் நள்ளிரவில் யாருக்கும் தெரியாமல் இருட்டில் தாழ்வாரத்தில் குழியைத் தோண்டிப் பானையை வெளியில் எடுத்து மோகராக்களை கையால் தடவித் தடவிப் பார்த்து விட்டு மறுபடியும் பானையைக் குழியில் வைத்து விடுவான். இந்த மோகராக்கள்தான் இப்போது அவனுடைய குழந்தைகள், இவற்றைச் சம்பாதிக்க அவன் கொஞ்சமாகவா கஷ்டப் பட்டிருக்கிறான்!

இஸ்மாயில் தான் படுத்திருந்த ஜமக்காளத்தை எடுத்துவிட்டு ஒரு சிறு கடப்பாரையால் தரையைத் தோண்டினான், பானை கைக்குத் தட்டுப்பட்டது. கையை அதற்குள் விட்டுப் பார்த்தான். ஊஹூம், இன்னும் பானை நிரம்பவில்லை. அது நிரம்ப இன்னும் எவ்வளவு மோகராக்கள் தேவைப்படுமோ?

அவனுக்கு ஓர் அர்த்தமற்ற சந்தேகம் தோன்றியது. மோகராக்கள் முன்பு இருந்ததை விடக் குறைவாகிவிட்டனவா? மண் மோகராக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சி விடுகிறதோ? விளக்கேற்றிப் பார்க்கமுடியாமல் தவித்தான் அவன். விளக்கேற்றினால் ஆபத்து. யாராவது வேலி இடுக்கு வழியாக அந்த மோகராக்களைப் பார்த்துவிட்டால்...! இஸ்மாயிலே அந்த மோகராக்கள் எல்லாவற்றையும் சேர்ந்தாற்போல் தன் கண்களால் பார்த்ததில்லை; கைகளால் அவற்றைத் தடவிப் பார்ப்பதோடு சரி...

ஒரு பெரிய குளம் வெட்டுவது அவன் திட்டம். ஊர்ப்பஞ்சாயத்து யூனியனின் தலைவரான ரஃபிமியானிடம் அவன் முன்னமே சொல்லி வைத்திருக்கிறான். ரஃபி வாலிபன்தான்; இருந்தாலும் நாணயஸ்தன்; அதனால்தான் அவனுக்கு அந்தப் பதவி கிடைத்தது. இஸ்மாயில் ஊர்ப் பெரிய மனிதர்களைச் சாட்சிக்கு வைத்துக் கொண்டு அந்த மோகராக்களை ரஃபியிடம் கொடுப்பான். பிறகு அவனுடைய வீட்டுக்கு முன்னால் குண்டும் குழியும், பொந்தும் புதருமாய் இருக்கும் இடம் ஒரு விசாலமான குளமாக உருவெடுக்கும். காக்கையின் சிறகு போல் தெளிந்த நீர் அதில் சலசலக்கும். தோண்டப்பட்ட மண் குளத்தின் நான்கு பக்கங்களிலும் மலைபோல் இருந்து கொண்டு தண்ணீரைக் கட்டிக்காக்கும். குளத்தைப் பார்ப்பவர்களுக்குக் கண் குளிர்ந்து போகும். உள்ளூர்க்காரர்களும் வெளியூர்க்காரர்களும் அந்தப் பெரிய குளத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள், பணம் மிச்சப்பட்டால் இரண்டு படித்துறைகள் கட்டி விடலாம் படித்துறைகளில் ஆலும் அரசும் வந்து விட்டால் எவ்வளவு களையாக இருக்கும்!

அந்தப் பக்கமாகச் செல்லும் பிரயாணிகள் மரத்து நிழலில் உட்கார்ந்து கொண்டு வழிச் சாப்பாட்டைச் சாப்பிடுவார்கள் குளத்துத் தண்ணீரை இருகைகளாலும் மொண்டு மொண்டு குடிப்பார்கள், மனிதர்கள் மட்டுமல்ல, தாகத்தால் தவிக்கும் ஆடு மாடு, கன்றுகள் கூட அங்கே தண்ணீர்

குடித்து மகிழும். சின்னஞ்சிறு பையன்கள் அதில் குதித்து நீந்தி விளையாடுவார்கள், கிராமத்துப் பெண்கள் அந்தத் தண்ணீரைக் குடங்களில் எடுத்துப் போவார்கள். வாலிபர்கள் மழைகாலத்தில் பனங்கட்டைகளை மிதக்க விட்டு அவற்றின் மேல் உட்கார்ந்து கொண்டு மீன் பிடிப்பார்கள். ..........

இந்தக் கனவு இஸ்மாயிலைப் பைத்தியமாக ஆக்கியிருந்தது. இந்தக் குளம் வெட்டி முடித்து அதை அவன் கண்ணால் பார்ப்பானா? அதைப் பார்க்க வேண்டும் என்பது தான் அவனது வாழ்க்கையின் லட்சியமாகி விட்டது. அதுவரை தன்னை உயிரோடு வைத்திருக்கும் படி அல்லாவை இறைஞ்சுவான் இஸ்மாயில். அவனுக்கு உயிருக்கு உயிரான ரம்ஜான் ''தாகம், தாகம் என்று துடித்துச் செத்துப் போனான். இப்போது மூங்கில் புதருக்கடியில் ஒரு கல்லறையில் தூங்கிக் கொண்டிருக்கும் ரம்ஜானின் பெயரால் ஒரு குளம் வெட்டினால் தான் அந்தச் சிறுவனின் மரண தாகம் தணியும்.

ஆனால் பானை இன்னும் நிறையவில்லையே; பானை நிறைந்தபிறகு தானே குளம் வெட்ட ஏற்பாடுகளைத் தொடங்க முடியும்.

ஊரில் இஸ்மாயிலைப் பற்றிய ஏச்சுப் பேச்சு பரவியது. இந்த வெட்கங் கெட்ட இஸ்மாயில் ஓர் இந்துப் பெண்ணுக்கு அதுவும் அயோக்கியன் ஐதுராயின் பெண்ணுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறானே ...... ! என்ன அநியாயம்! அந்த அப்பனுக்குப் பிறந்த பெண் எந்த நோக்கத்தோடு இவனுடைய வீட்டுக்குள் நுழைந்திருக்கிறாளோ, அல்லாவுக்குத்தான் வெளிச்சம்!

ஆனால் சிலர் இஸ்மாயிலைப் பாராட்டவும் செய்தார்கள். பலே ஆள்தான் இஸ்மாயில்! அந்தப் பெண்ணை எப்படியோ மடக்கித் தன் வீட்டில் தங்கச்செய்து விட்டானே! கொஞ்ச நாட்கள் கழித்து ''கலமா'' ஓதி அவளை மதம் மாற்றி ரஃபிமியானுக்கு நிக்காஹ் செய்து விடப் போகிறான். அதுதான் இப்போது ரஃபி இஸ்மாயிலைச் சுற்றித் திரிந்து கொண்டிருக்கிறான். அதனால்தான் ரஃபிக்கு இப்போது இஸ்மாயில் சொல்வதெல்லாம் வேத வாக்கு!

ஒரு நாள் நிஜமாகவே ரஃபியின் உறவினர்கள் இந்த விஷயமாக இஸ்மாயிலிடம் பேச வந்துவிட்டார்கள்.

''இந்த ஐதுராய் பாகிஸ்தானின் பரம விரோதியாயிருந்தான்''

''அதற்குப் பெண் என்ன செய்வாள்''? இஸ்மாயில் சொன்னான்.

''தந்தையின் குற்றத்திற்குப் பெண்ணைப் பழிவாங்கவேண்டும்''

அவளை இங்கிருந்து தப்பிப்போக விடக்கூடாது! நீ உம் என்று சொன்னால் போதும். ரஃபி அவளை நிக்காஹ் பண்ணிக் கொள்ளத் தயாராக இருக்கிறான், இஸ்மாயில் பதில் சொல்லவில்லை

''என்ன யோசிக்கிறாய்? ரம்ஜானைப் பற்றித்தானே? பாவம் பச்சைப் பிள்ளையை எலி அடித்துக் கொல்வதுபோல் தடியால் அடித்துக் கொன்றார்களே பாவிகள்!'' பிள்ளையின் மரணத்தை நினைவூட்டி அவன் மனதில் துவேஷத்தைக் கிளப்ப முயன்றார்கள் வந்தவர்கள்.

ஆனால் இஸ்மாயிலின் மனத்தில் நினைவுக்கு வந்தது மற்றொரு நிகழ்ச்சி. ரம்ஜான் பிறப்பதற்கு பல வருடங்களுக்கு முன் நடந்தது அது.

சோகம் கப்பிய மாலை நேரம் அப்போதுதான் தாயைப் பறிகொடுத்த ஒரு சிறுமி விம்மி விம்மி அழுதுகொண்டே காமரனிடம் வருகிறாள். காமரனால் அவளைத் தேற்ற முடியவில்லை. சிறுமியின் முகம் அழுது, அழுது சிவந்து வீங்கிப் போகிறது கடைசியில் இஸ்மாயில் அந்தக்குழந்தையை தோளில் தூக்கிக் கொண்டு போய் ரயில் ஸ்டேசனுக்கருகில் உள்ள மைதானத்தில் சுழலும் குடை ராட்டினத்தைக் காட்டித்

தேற்றுகிறான். அக்காட்சியில் தன் வருத்தத்தை மறந்து ''களுக்'' என்று சிரிக்கிறாள் சிறுமி மஞ்சு...

''உனக்குக் கொஞ்சமும் கவலை வேண்டாம் இஸ்மாயில்! நல்ல பிறையாகப் பார்த்து ஒரு நாள் நிச்சயம் செய்துவிடு. ரஃபி அந்தப் பெண்ணை கண்ணுக்குள் வைத்துக் காப்பாற்றுவான்''

இஸ்மாயில் ஏதாவது சால்ஜாப்பு சொல்லி அவர்களைத் தட்டிக் கழிக்கப் பார்த்தான் ''ஊருக்குப் பக்கத்தில் போலீஸ் ஸ்டேஷன். வயது வந்த பெண்ணைப் பலவந்தமாக நிக்காஹ் செய்து கொடுக்க முடியுமா? அதுவும் ரொம்பத் துணிச்சல்காரப் பெண் அவள்; பலாத்காரத்துக்கு பணிந்து போகக் கூடியவள் அல்ல. அவள் மீறி ஓடினால் நான் என்ன செய்யமுடியும்?''

''அந்தக் கவலை உனக்கு வேண்டாம் ரஃபிமியான் ஊருக்குப் பெரியவன். அவன் எல்லா விஷயங்களையும் கவனித்துக் கொள்வான்''

சமையல் அறையில் காரியமாக இருந்த காமரனின் காதுகளில் அவர்களுடைய பேச்சு ஓரளவு விழுந்தது. அவர்களுடைய கசமுசப் பேச்சும், அவர்கள் இங்கும் அங்கும் திருட்டுத்தனமாகப் பார்க்கும் பார்வையும் அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. கொஞ்ச நாட்களாகச் சில வதந்திகள் பராபரியாக அவள் காதுகளிலும் விழுந்தன. காமரன் செய்வதறியாமல் துடித்துக் கொண்டிருந்தாள் ...... இந்த அதிர்ஷ்டம் கெட்ட பெண் எங்கே போய் விட்டாள்?

இதோ நடு அங்கணத்தில் நிச்சிந்தையாக படுத்து உறங்குகிறாளே! . . .

ராத்திரி வேளைகளில் சாப்பிடுவதில்லை அவள். கேட்டால் 'பசிக்கவில்லை' என்கிறாள் ஆனால் உண்மையில் அவளுக்குப் பசிக்காமல் இல்லை. சமைக்கச் சோம்பல் அவ்வளவுதான்! சுத்த சோம்பேறி! சரியான தூங்கு மூஞ்சி.

இருந்தாலும் மனம் கேட்கவில்லை காமரனுக்கு. மஞ்சு நிஜமாகவே தூங்குகிறாளா அல்லது தூங்குவதுபோல் பாவனை செய்து கொண்டு திண்ணையில் நடக்கும் மந்திராலோசனையை ஒட்டுக் கேட்கிறாளா?

காமரன் உள்ளே எட்டிப்பார்த்தாள் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் ஒளியில் நிச்சிந்தையாகப் படுத்துறங்கும் மஞ்சுவின் கள்ளங்கபடமற்ற முகம் தெரிந்தது. எவ்வித பயமோ, அவநம்பிக்கையோ இல்லாமல் ஒரு முகமதியனின் வீட்டில் தூங்கிக் கொண்டிருக்கிறாள் அந்த இந்துப் பெண். ஓர் இளவரசி தன் அரண்மனையில் ஒயிலாகத் தூங்குவது போல். காமரனுக்கு எரிச்சல் வந்தது. என்ன அசட்டுத் தைரியம் இந்த முரட்டுப் பெண்ணுக்கு!

அந்த இரவை எப்படியோ கழித்தாள் காமரன். காலையில் கண்விழித்ததும் மஞ்சுவிடம் சொன்னாள்; இதோ பார்; இங்கிருந்து உடனே போய்விடு. நீயாரோ, நான் யாரோ; நான் ஏன் உன்னைக் கட்டிக்கிட்டு மாரடிக்கணும்! நீ நடையைக் கட்டு, ஆமாம் சொல்லி விட்டேன்!

மஞ்சு காமரனின் பேச்சைப் பொருட்படுத்தவில்லை; ஏதோ ஹாஸ்யத்தைக் கேட்டவள்போல் கடகட வென்று சிரித்தாள்.

''என்னடி பதிலைக் காணோம்''?

மஞ்சு ஒரே வாக்கியத்தில் பதில் சொன்னாள். ''நான் என் ஜனங்களை விட்டுட்டுப் போகத் தயாராயில்லை''

''உன் ஜனங்களா? நல்ல வேடிக்கைதான் இது! எப்படியெல்லாம் பேசக்கத்துக் கிட்டிருக்கே நீ? நீ வேறே மதம் நாங்க வேறே மதம்! உனக்கு இடங்கொடுத்ததுக்காக இப்பவே ஊர்க்காரங்க எங்களைப் பழிக்கிறாங்க''

''நீங்க மத்தவங்க மாதிரி இல்லையே அதனால்தான் உங்ககிட்ட வந்தேன்'' என்று சொன்ன மஞ்சு காமரனைக் கேட்டாள்! இன்னிக்கு உனக்கு என்ன வந்திட்டுது அண்ணி? எள்ளுங் கொள்ளுமா வெடிக்கிறியே!''

''கொஞ்சங்கூடப் பயமே இல்லையே, இந்தப் பெண்ணுக்கு! ஏண்டியம்மா காயஸ்தர் தெருவோ ஒடிப்போயிடுச்சு; நீ மட்டும் என்ன தைரியத்திலே இங்கே வந்திருக்கே?''

''என் அம்மா செத்துப் போனபோது காயஸ்தர் தெருவிலே ஜனங்கள் இல்லையா? அப்போ நான் எந்த நம்பிக்கையிலே உங்க கிட்டே வந்தேன், சொல்லு? அந்தத் தைரியத்திலேதான் இப்பவும் வந்திருக்கேன்.''

அவளுடைய பேச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் காமரன் அங்கிருந்து நகர்ந்தாள்.

மறுநாள் மாலை மஞ்சு மாவு பிசைந்து ரொட்டி தட்டிக் கொடுக்க காமரன் அவற்றைப் பொரித்துக் கொண்டிருந்தாள். மஞ்சு தன் புக்ககத்துக் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் மைத்துனனும் ஓரகத்தியும் அவளைப் படாதபாடு படுத்தியவரலாறு – காரணம் சொத்துத்தான். அவளுக்குரிய பங்கைக் கொடுக்க அவர்களுக்கு விருப்பமில்லை.

காமரன் சொன்னாள்; ''அவங்க உன்னை விரட்டினதுக்குச் சொத்துமட்டும் தான் காரணமில்லே, உன் அகம்பாவமுந்தான். சின்ன வயசிலேயிருந்து உன் துடுக்குத்தனமும் பிடிவாதமும் பழகிப் போன எனக்கே உன்னை அடிச்சு விரட்டணுமின்னு தோணுதே மத்தவங்களுக்கு எப்படி இருக்கும்!''

மஞ்சு சிரித்துக் கொண்டே சொன்னாள் அதனால் தான் உன்கிட்டே ஓடி வந்துட்டேன்''

வாசலில் காலடிச் சத்தம் கேட்டது.

மறுபடியும் மந்திராலோசனையா? காமரன் பயத்துடன் வெளியே எட்டிப் பார்த்தாள். அவள் நினைத்தது சரிதான்! ஊர்ப்பெரியவர்கள் வந்து விட்டார்கள், இஸ்மாயிலுக்குத் துர்ப்போதனை செய்ய!

காமரன் மஞ்சுவிடம் சொன்னாள்; ''உனக்கு இங்கேயும் இடமில்லை, நீ நாளைக்கே இங்கேயிருந்து போயிடு.''

மஞ்சு திகைத்துப் போய் அவளைப் பார்த்தாள்.

''ஆமாம் நெசமாத்தான் சொல்றேன்? நாளைப்பகல் ரயில்லே புறப்பட்டுப் போயிடு நீயாக் கௌம்பல்லேன்னா உன்னைத்! தொடப்பத்தால் அடிச்சு விரட்டிப் பிடுவேன்!''

மஞ்சுவுக்கு சிரிப்பு வந்துவிட்டது. ''அப்படியே செய் அண்ணி! உன்கிட்டே இதுவரை வாய்க்கு ருசியாகத் தின்பண்டங்கள் தான் வாங்கிச் சாப்பிட்டிருக்கேன்! ஒரு தடவை கூட தொடப்பத்தாலே அடி வாங்கினதில்லே, அதுவுந் தான் எப்படியிருக்குன்னு பார்க்குறேனே! ..... அது போகட்டும் நாளைக் காரியத்தை நாளைக்குப் பார்த்துக்கலாம் இப்போ அடுப்பைக் கவனி அண்ணி!''

காமரன் கோபத்துடன் வாணலியைக் கீழே இறக்கி வைத்தாள். அடுப்பு நாசமாய்ப் போகட்டும்! நான் கேட்கிறேன் உனக்கு மானம் ரோசம் ஒண்ணுங் கிடையாதா எல்லாத்தையும் உதுத்துட்டியா ?''

அப்போது இஸ்மாயில்தன் ஹுக்காவுக்கு நெருப்பு எடுத்துக் கொள்ள அங்கே வந்தான் மஞ்சு அவனிடம் புகார் செய்தாள். ''பார் அண்ணா! அண்ணி என்னை விரட்டறா''.

காமரனின் கோபம் குறையவில்லை. ''ஆமாம் நிச்சயம் விரட்டத்தான் போகிறேன்! நான் வேறே மதம்! நீ வேறே மதம்! தேசம் கூட இரண்டாப் போயிடுச்சு ! நீ ஏன் இன்னும் இங்கே இருக்கணும்''?

இப்போது மஞ்சுவுக்கும் கோபம் வந்து விட்டது.

''நான் எங்கே போவேன் சொல்லு! உலகத்திலே எனக்கு யார் இருக்கிறாங்க? . . . சரி அண்ணா நீ என்னைக் கூட்டிப் போய் எனக்கு ஏதாவது ஏற்பாடு செஞ்சுட்டு வா! எனக்கு அந்தத் தேசத்துலே யாரைத் தெரியும்? என்னைக் கொடுத்த இடத்திலே கூட வச்சுக்காம தொரத்திட்டாங்களே!''

அவளது கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருகியது.

இஸ்மாயில் மனைவியிடம் சொன்னான்! ''மஞ்சு போறபோதுபோகட்டும். இப்போ என்ன அவசரம்? போய் நடுத் தெருவிலே நிற்டாளா என்ன? நல்லா யோசிச்சு ஏதாவது ஏற்பாடு செய்யலாம்''

காமரன் அவன்மேல் எரிந்து விழுந்தாள்

''ஆமா' நீ அப்படித்தான் சொல்லுவே! எனக்கு எல்லாந் தெரியும்! அவள் நாளைக்கே இங்கேயிருந்துபோயிடணும்! ஆமாம்''!

அழுவது இஸ்மாயிலுக்கு வழக்கமாகி விட்டது. நள்ளிரவில் அவனுக்கு விழிப்பு வந்துவிடும். அவன் சிறு குழந்தையைப்போல் விம்மி விம்மி அழுவான். வயதான ஆண் பிள்ளை சிறுபிள்ளையைப் போல அழுவதற்கு நள்ளிரவுதானே சரியான நேரம்! அவனுடைய அழுகைக்குச் சாட்சிகள் வீடும் முற்றமும் அந்த அல்லாவுந்தான்! ரம்ஜான் இளைப்பாறும் அக்கல்லறையும் ஒரு வேளை அந்த அழுகையைக் கேட்டுக் கொண்டிருக்குமோ, என்னவோ!

மறுநாள் பகலில் இஸ்மாயில் வீட்டில் இல்லை. அவனுக்கு ரஃபியின் வீட்டில் விருந்து. எப்போது அவன் வீடு திரும்புவானோ?

காமரன் ஒரு விஷயம் சொன்னால் சொன்னது தான். அவள் கணவனுக்குத் தெரியாமல் பாக்கு விற்றுப் பத்து ரூபாய் பணம் வைத்திருந்தாள். அதை அவள் மஞ்சுவிடம் கொடுத்து ரயிலடிக்கு அனுப்பி விட்டாள்.

ரயில் வந்தது. தான் பார்த்தே அறியாத கல்கத்தா நகரத்துக்கு டிக்கெட் வாங்கிக் கொண்டு மஞ்சு ரயிலில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். அவள் இந்து; ஆகையால் கல்கத்தா தான் அவளுடைய இடமாம்!

பிரயாணிகளின் தோற்றத்திலிருந்தே அவர்கள் எந்தப் பக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. முகம் உலர்ந்து, பார்வை வறண்டு, மௌனமாய் மேலே பார்த்துக் கொண்டிருப்பவர்கள் 'அந்தப் பக்கத்தைச்' சேர்ந்தவர்கள். அவர்களுடைய தோற்றத்திலும், அங்க அசைவுகளிலும் கையாலாகாத் தன்மை தன்னைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

பிரயாணிகளில் மஞ்சுவுக்குத் தெரிந்தவன் ஒருவன் இருந்தான். பெயர் விபின் தாம்பூலி. முன்பு காயஸ்தத் தெருவுக்குப் பின் தெருவில் இருந்திருக்கிறான். இப்போது இந்தியாவில் வசிக்கிறான்.

சுங்க அதிகாரிகள் உள்ளே வந்து பிரயாணிகளின் உடைமைகளைச் சோதனை செய்து விட்டு இறங்கினார்கள். ரயில் புறப்பட்டது. உலர்ந்து வறண்ட முகங்களில் இப்போது சற்று உற்சாகத்தின் அறிகுறி காணப்பட்டது. வெறும் அறிகுறிதான்; வாய்விட்டுச் சிரிக்க இன்னும் நேரம் வரவில்லை. எல்லைப் புளிய மரத்தைத் தாண்டவில்லையே இன்னும்!

ஓடத் தொடங்கிய வண்டியுடன் ஓடி வந்தான் இஸ்மாயில். வீடு வந்து விஷயத்தைக் கேள்விப்பட்டதும் ஸ்டேஷனுக்கு ஓடோடி வந்திருக்கிறான்.

அவன் துணியால் மூடப்பட்ட ஒரு பித்தளைப் பானையை ஜன்னல் வழியே மஞ்சுவிடம் கொடுத்தான்.

''ரசகுல்லா வாங்கி வந்திருக்கிறேன் மஞ்சு ராத்திரி சாப்பிடு''. மஞ்சு அழுது கொண்டே சொன்னாள். ''எனக்கு வேண்டாமண்ணா! உன் வீட்டிலே எனக்கு இடம் தரல்லே! ஒரு வேளைச் சாப்பாடு கொடுக்காட்டா என்ன மோசம்!''

அவள் சொன்னது அவன் காதுகளில் விழவில்லை. ரயிலின் வேகம் அதிகமாகி விட்டது. அவன் பின்தங்கி விட்டான். மஞ்சு ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். பிளாட்பாரத்தின் ஓரத்தில் அவன் ரயிலைப் பார்த்துக் கொண்டு சிலையாக நிற்பது தெரிந்தது.

விபின் மஞ்சுவைக் கேட்டான். ''இஸ்மாயில் உன்கிட்டே என்ன கொடுத்தான்?

''சாப்பிடப் பட்சணம்''

குலுங்கக் குலுங்கச் சிரித்தான் விபின். ''நீ இதுவரை எப்படியோ இருந்துட்டே போனது போகட்டும் இனிமேலாவது அவ

ங்க சங்காத்தத்தை விட்டுவிடு! இஸ்மாயில் கொடுத்த பட்சணத்தைத் தொடாதே! அவன் 'சுத்தஅயோக்கியன்' 'பாகிஸ்தான், பாகிஸ்தான்னு கத்திக்கிட்டிருந்தான். அவன் மாதிரி ஆளுங்கதான் இந்துக்களைக் கொல் றாங்க வீட்டுக்கு நெருப்பு வைக்கிறாங்க ... அந்தத் துரோகி பட்சணத்திலே விஷம் கூட வைச்சிருப்பான். அதை அப்படியே வெளி யிலே எறிஞ்சுடு!''

மஞ்சு சொன்னாள்; ''எப்படி இருந்த வங்க இப்போ ஆயிட்டாங்க!''

ரயில் புளியமரத்தைத் தாண்டியதும் பிரயாணிகளின் முகத்தோற்றம் சட்டென்று மாறியது. கூனிக்குறுகி உட்கார்ந்து கொண்டு ''ஜெய் ஹிந்த்'' என்று கோஷித் தார்கள்.

மஞ்சு பானையைத் திறந்து பார்த்தாள் ரசகுல்லா எங்கே? மேலே இருந்தது முதல் நாள் பொரித்த பூரியும் எள்ளுருண்டையும்! தான்! சீ இதையா அவள் சாப்பிடுவாள். இதைப்போய் ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்து கொடுத்து அவளை அவமானப்படுத்தி யிருக்கிறானே இஸ்மாயில் ..... இன்னும் என்ன இதில்? ஏன் இவ்வளவு கனக்கிறது பானை? பளபளவென்று இதென்ன ........ மோகராக்கள் ஒன்றல்ல, இரண்டல்ல ..... பூரிக்கும் எள்ளுருண்டைக்கும் அடியில் பானை நிறைய மோகராக்கள்.

இஸ்மாயில் அண்ணா அவளுக்கு ஒரு வேளை சாப்பாடு மட்டும் தரவில்லை. அப லையான அவள் புதியஊரில் பட்டினிகிடக் காது வாழ ஏற்பாடு செய்து விட்டான் ▢

# நான் பாட ஆரம்பிக்கும் போதெல்லாம்

நான் பாட ஆரம்பிக்கிறேன்...
என் பாடல் உருவமற்றதாய்
வந்த ஆகாசப் பரப்பிலும்...பரந்துபட்ட
நீண்ட வெளிகளிலும்
முட்டி மோதித் திமிறிக் கொண்டு நிற்கிறது
குயிலும் சிட்டுக் குருவியும் கூட
என் பாடல்களை ரசிக்கும்
பாவனை காட்டுகின்றன
வருடுகின்ற காற்றிற்கு
தலையைச் சிலுப்பிவிட்டு, மலர்கள்
தன்னைப் பார்த்து குழந்தைத் தனமாய்
சிரிப்பதாகத் தோன்றுகிறது
ஒரு தாய் போல
என் பாடல்களால் அவற்றின் தலையை
தடவி விட்டுக் கொள்கின்றேன்
மரத்தில் தாவிய அணிலை
என் பாடல் சலனப் படுத்தியிருக்க வேண்டும்
அது கண நேர அனுதாபத்தைத் தன்
விழிகளில் தேக்கி என்னை
எறிட்டுப் பார்க்கிறது
தென்றலிற்கு என் போக்கு
கவலையை அளித்திருக்க வேண்டும்.
ஏனெனில்
மௌனமாக அது என்னைக் கண்காணிப்பதை
என்னால் உணர முடிகிறது.
நான் என்ன செய்யட்டும்
நான் பாடத் தொடங்குகையில்
வாத்தியக்காரன் தன் கருவிகளை
மூட்டை கட்டி வைத்து விட்டான்
நான் ஆடத் தொடங்குகையில்
மத்தளகாரன் தன் கருவிகளைத்
தழுவ மறுத்துவிட்டான்.
நான் மீட்டிய வீணை
தன் தந்திகளை அறுத்துக் கொண்டு
தற்கொலை செய்து கொண்டது.
என் காற்சிலம்பு காலடியிலேயே
உடைபட்டுப் போனது.
என் பார்வை பட்டுத் தானா
இந்த மலர்களெல்லாம் கருகிப் போயின?
நான் நேசித்தவற்றையெல்லாம்
காலம் பறித்துக் கொண்டது.
நான் யாசிப்பவை எவற்றையும்
உலகம் தர மறுக்கிறது,
நான் பாடுவதனால் தான்
அபசகுனம் ஏற்பட்டதா!
அல்லது
அபசகுனங்கள் ஏற்படும் போது தான்
நான் பாட ஆரம்பிக்கிறேனா?
என் பாடலினால் தான்
இலையுதிர் காலம் தோன்றியதா...
அல்லது
இலையுதிர் காலத்தில் தான்
நான் பாடுகிறேனா?
எது எப்படியோ ஆயினும்
நான் பாடியே தீருவேன்
என்பாடல்கள் மூலம் நிலையானதாய்
எதையேனும் சமைய முடியுமாயின் ▢

— மைதிலி அருளையா

## இலக்கியவாதிகள்

நம்முடைய இலக்கியவாதிகள் பல்வேறு வகைப்பட்டவர்கள். வெவ்வேறு வகையான கொள்கைகளுக்குப் பின்னால் அணிவகுத்து நிற்பவர்கள். இலக்கியம் படைக்கின்றோம் என்று சொல்லிக் கொண்டு தம்முள் முரண் பட்டவாறு இலக்கியப் பணி புரிகின்றனர்.

இலக்கியவாதிகள் எல்லோரும் ஒத்த கருத்துடையவர்களாக இருக்கவேண்டும் என்பதல்ல, இருக்கவும் முடியாது என்பதும் உண்மையே.

ஆனால் —

இலக்கியவாதிகள் என்பதற்கு முன்னர் அவர்கள் மனிதர்கள். சாதாரண மனிதர்களுக்கு உரிய நட்பும், பரஸ்பரபுரிந்துணர்வும் அவர்களுக்கும் இருக்கவேண்டும். ஆகவே தான் எந்த இலக்கியவாதி எந்தக் கருத்தைக் கொண்டு இருந்தாலும் அவர்களுக்கு இடையே நட்பு இருக்க வேண்டும்.

## "இலக்கியாவின் இலக்கியப்பக்கங்கள்

கருத்துக்கள் மோதிக்கொள்ளலாம். முரண்பட்டுக் கொள்ளலாம். ஆனால் தங்கள் அடிப்படை மனித இயல்புகளை கைவிட்டு விடக்கூடாது. கருத்து வேறுபாடு கொண்டவர்கள் சந்தித்துக் கொண்டால் நட்புடன் பழகிக் கொள்ளவேண்டும.

இன்று நம் மத்தியில் உள்ள இலக்கியவாதிகளின் நிலை என்ன? கருத்துவேறுபாடு உடையவர்கள் பரம்பரைப் பகையாளிகள் போல மோதிக் கொள்ளுகின்றார்கள். சதாகாலமும் ஒருவர் மற்றவரை அவதூறு சொல்லிக் கொண்டும் உள்ளனர்.

நேருக்குநேர் சந்திக்கும்போது உம் என்று முகத்தை தவைதுக் கொண்டு இருந்தும் விடுகின்றனர். இது ஆரோசகியமான ஒருசெயல் அல்ல.

## கைபோன போக்கில் கிறுக்கல்கள் (01)

மேற்படி தலைப்பில் வியூகம் "3" ஆவது வது இதழில் சில எழுத்தாளர்கள் சில கருத்துக்களை எழுதியுள்ளனர். அதில் உமா வரதராஜன் அவர்களும் ஒருவர். (வியூகம் ஆசிரியரும் அவரே)

"தீற்று" சஞ்சிகையில் சில வருடங்களுக்கு முன்னர் கிறுக்கல்கள் என்று தன் எண்ணங்கள் சிலவற்றை எழுதிய அதே உமாவரதராஜன் இப்போது கைபோன போக்கில்.

இரண்டு தலைப்புகளுக்கும் இடையில் ஒரு பொதுவான ஒற்றுமை இருப்பது கவனிக்கத்தக்கது. கைபோன போக்கில் எல்லாம் போனால் அது கிறுக்கல்களாகத்தான் முடியும். உமாவரதராஜன் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களைப் பற்றி சில கருத்துக்களை முன் வைத்துள்ளார்.

டொமினிக் ஜீவா அவர்கள் வித்தியாசமான வராக இருக்கலாம். அவர் கூறும்கருத்துக்கள் கோமாளித்தனமாக இருக்கலாம். மாறாத வியாதியாகத் தெரியலாம். அது வேறு விடயம்.

ஜீவாவின் கருத்துக்கள் எல்லோருக்கும் உடன்பாடானதல்ல. அல்லது அவர் மேடையில் ஆவேசமாகப் பேசும் பேச்சுக்கள் சகிக்கக் கூடியதும் அல்ல.

ஜீவாவின் கருத்துக்களை கேட்டுக் கொண்டு தலையாட்டிக்கொண்டு இருங்கள் என இங்கு கூற வரவில்லை. ஆனால் அவர் பற்றிக் கருத்துக் கூறுவதாக நினைத்துக் கொண்டு பழிவாங்க முனையாதீர்கள்.

- மல்லிகையில் எழுதாதவர் ஒரு எழுத்தாளனா? எனக்கேள்வி கேட்க முடிகிறது.

● மல்லிகைக்கு அஞ்சலட்டை எழுதும் எண்ணம் கூட எனக்கு ஏற்பட்டதில்லை.

எனக் குறிப்பிடும் உமா வரதராஜன் அவர்களே இப்படி நீங்கள் மட்டும் குறிப்பிடவில்லை. மல்லிகையில் மிக நீண்ட காலமாக பல ஆக்கங்களை எழுதி தங்கள்பெயர்களைப் பதிப்பித்துக் கொண்டவர்களும் இப்போது கேட்கிறார்கள். சொல்கிறார்கள். வளர்ந்து விட்டார்கள் தானே? சரி இனி விடயத்திற்கு வருவோம். மல்லிகையில் எழுதாதவன் ஒரு எழுத்தாளனா? ஜீவா அவர்கள் கேட்பது ஒரு முட்டாள்தனமான கேள்விதான். ஆனால் ஜீவா வெளிப்படையாகக் (அப்படிக் கேட்டிருந்தால்) கேட்கின்றார். வேறு சிலர் இதே கேள்வியினை வேறு விதமாகக் கேட்கின்றனர்.

தங்கள் சஞ்சிகையில் எழுதுபவர்கன் தான் சிறந்த எழுத்தாளர்கள் எனப் பட்டியல் போடுவதுடன் ஏனையவர்களை எழுத்தாளர்களாகக் கணிப்பது கூட இல்லை. எனவே விளைவு ஒன்றுதான். ஜீவாவை மாத்திரம் குற்றம் சாட்டலாமா? மல்லிகைக்குத் தாங்கள் அஞ்சல் அட்டை எழுதாதது கூட நல்லது தான். ஆனால் 1979ம் ஆண்டு செப்ரெம்பர் மாத கீற்று சஞ்சிகையில் கிறுக்கல்கள் பகுதியில் தாங்கள் எழுதிய சில கருத்துக்களைப் பார்ப்போம்.

''கல்முனை கலை இலக்கிய ரசிகர் சங்கம் மேமாதச் சிறுகதைகள் பற்றிய விமர்சனக் கூட்டமொன்றை ஒழுங்கு செய்திருந்தது. எல்லோரும் ஒருமித்த குரலில் வீரகேசரிக் கதைகளையே புகழ்ந்தார்கள் என்ற தொனிபட வீரகேசரி அதுபற்றிய செய்தியை வெளியிட்டது. உண்மையில் வீரகேசரி இலக்கியப் பணியை ஒரு ஸீரியஸ் விஷயமாகப் பொருட்படுத்தாமல் பேசியவர்களும் அன்று அங்கே இருந்தார்கள். அப்படிப் பேசிய இரண்டொரு பேரில் நானும் ஒருவன். புகழ்ச்சியை மாத்திரம் தங்களுக்கு சாதகமாக்கிக்கொள்ளும் வீரகேசரியை என்ன செய்யலாம். காரசேகரி என்று ஒன்றை உடனே ஆரம்பிக்க நம் கையில் காசுமில்லையே''

1979ல் இவ்வாறு எழுதிய பின்னர் 09. 02. 1986ம் திகதி (வீரகேசரியில் பிரசுரமான முதற் சிறுகதை -விளிம்பு-)

இப்போது வீரகேசரியில் இலக்கியப் பணி பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? கிட்டத்தட்ட இருபது வருடங்களாகவீரகேசரி வாரவெளியீட்டின் ஆசிரியராகத் தொடர்ந்து ஒருவரே இருக்கின்றார். (வார வெளியீட்டின் ஆசிரியர் மாறி இருந்தாலும் பரவாயில்லை.)

எனக்குத் தெரிந்து இங்குபாரம் சுமக்கிறவன் சையது ஒருவன் தான். அவனும் வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவன் மாதிரித் தெரியவில்லை. மூட்டைகளை இறக்கியதும் கிடைத்த கூலிக்குக் கஞ்சா அடித்து என்ன சந்தோஷமாக இருக்கின்றான்''.

எனச் சிறுகதை ஒன்றில் குறிப்பிடும் நீங்கள் ஜீவாவை பைத்தியகாரனாக உருவகப் படுத்தியது புதினமாகத் தோன்றாது. காரணம் என்ன என்று புரிகின்றதுதானே.

## □ கைபோன போக்கில் கிறுக்கல்கள் (02)

உமாவரதராஜன் அவர்களே மீண்டும் 1979ம் ஆண்டு செப்ரெம்பர் மாத கீற்று. மீண்டும் உங்கள் கிறுக்கல்கள் பகுதி:—

'' ...... சமீபத்தில் ஒரு சப் எடிட்டரோடு பேசிக் கொண்டு இருந்தேன். பேச்சு கடைசிக் கட்டத்துக்கு வந்தது. தனக்கு அச் சமயம் அவசரமாய்த் தேவைப்படும் கதைகள் பற்றிச் சொன்னார். எப்படி இருக்க வேணும் என்று விபரித்தார் ... .. கற்பழிப்புக் கதைகள் ... இல்லாட்டி இந்த புஷ்பா தங்கத்துரை, மணியன் எழுதுற மாதிரி ஸெக்ஸ் கதைகள்'' எனக்கு இதுகள் எழுதி அவ்வள வனுபவமில்லை என ஒரு வகையாய் சமாளித்துப் பேசி வெளியே வந்தேன். சற்றுத் தாமதித்தால் காசைக் கையிலேயே கொடுத்து எவளையாவது கற்பழிக்கப் பண்ணி கதை வாங்கிப் போட்டு விடுவார்

கள் போலிருந்தது. Wrong number call களுக்கு நாம் என்ன செய்ய''

எனக் குறிப்பிட்டு இருந்தீர்கள் நல்லது ஆனால் அண்மையில் தங்கள் சிறுகதைத் தொகுப்பைப் படித்து முடித்ததும் தங்க, ளது ஆபாசஎதிர்ப்பின் தாக்கத்தினை உணரமுடிந்தது.

நீங்கள் சிறந்த கலைஞர். கவித்துவ மான எழுத்தாற்றலும், அழகுணர்ச்சியும் மிக்கவர் என்பதும் உண்மையே. என்றாலும் சில விடயங்கள் மனதுக்கு சங்கடத்தைத் தருகின்றன. ''உள்மன யாத்திரை'' என் னும் சிறுகதைத் தொகுப்பில் பின்வரும் விடயங்கள் வருகின்றன.

(1) '' ...கணக்குப்பிள்ளை இரவில் பணம் கொண்டு வராவிட்டாலும் கட்டாயம் பார்சோப் கொண்டு வரவேண்டும்'' (பக்கம் 67)

2) '' ....என்னுடைய நீளக் காற்சட்டை களுக்கு ஸிப் இருப்பதில்லை எனக்கருதும் பெண்கள் பலரின் எண்ணங்களைப் பொடிப் பொடியாக்க வேண்டும்'' (பக்கம் 112)

(3) ''அவள் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து இப்போது சிறுநீர் கழித்துக் கொண்டிருப் பாள்'' (பக்கம் 112)

(4) ''மெஷின் வேலை செய்யுதில்லை ஒரு தரம் வந்து பார்க்கவேணும்''.

கீழேயா? மேலேயா? கீழ எண்டால் ஒயில் போட'' வேணும்'' (பக்கம்-67)

இவை பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

☐ **FORMULA**

500 பிரதிகள் = புத்தி ஜீவிகள்

1500 பிரதிகள் = மக்கள்

இவ்வாறு எழுதிவிட்டு விசித்திரமான formula போலும்! வேடிக்கை தான் என்று 10-1?-1989ம் திகதியிட்ட திசையில் எழுதி யுள்ள நிலாம்பரன் அவர்களுக்கு அனுதா பங்கள்.

இப்படியான ஒரு formula வை சொல்லுபவனோ அல்லது எழுதுபவனோ நிட்சயம் எப்படியான ஆளாக இருக்க முடியும். ( ! ? )

முழு முட்டாள் கூட இப்படிக் கருத் துக் கூற மாட்டான். எத்தனையோ விடயங்களை வரிக்கு வரி படித்துப் பிழை பிடிக்கும் நீங்கள் இப்படி நுனிப்புல் மேய்ந்து விட்டுத் தடுமாறலாமா? தாங்கள் எங்கே நிற்கிறீர்கள்? இதுவா தங்கள் முதிர்ந்த உள்ளத்தின் முதிர்வின் விளைவு?

''500 பிரதிகள் விற்பதல்ல பிரச்சனை. ஆரம்பத்தில் இருந்து பதின்மூன்று வருடங் களுக்குப் பின்னரும் 500 பிரதிகள் விற்பது தான் பிரச்சனைக்குரிய விடயம்''

சஞ்சிகைகளை மக்கள் மத்தியில் கொண்டு போக சில நடவடிக்கைளைத் தொடர்ந்து எடுக்க வேண்டும். எமது நோக் கமும் அதுவே. புத்தி ஜீவிகள் என்றால் அவர்கள் வானத்தில் இருந்து வந்தவர்களா? அவர்கள் மக்கள் இல்லையா?

சிறு சஞ்சிகைகள் பற்றிக் குறிப்பிடும் நிலாம்பரன் ''நிறுவன பலமற்ற நிலையில் இலட்சிய நோக்கும் ஆர்வமும்கொண்ட சில ரின் செயற்பாடுகளே இவற்றின் அடித்தளம்' என்று சொல்கின்றார்.

உண்மை தான். இலட்சியமும் ஆர்வ மும் பொறுமையும் இல்லாவிடின் சிறு சஞ் சிகைகளைக் கொண்டு நடாத்தமுடியாது.

ஆனால் சிலர் தங்கள் இலட்சியம் நிறைவேறிவிட்டதாலா? அல்லது சஞ்சிகை ஆசிரியர் என்ற பதவியினை விட வேறு வசதியான (?) பதவி கிடைத்ததாலா ? தத்தமது சஞ்சிகைகளைக் கை விட்டு விட் டார்கள்.

எத்தனை பேருக்குத் தத்தமது சஞ்சி கைகளுக்காக வசதியான பத்திரிகையில் வக்காலத்து வாங்க முடிகின்றது?

ஆசிரியர் குழுவில் இல்லை என்று சொல்லிக்கொண்டு வாசகர்! எழுத்தாளர் எழுதும் கடிதங்களை கிழமைக்கணக்காக

வைத்திருந்து ''எதிர்வினைகளுடன்'' பிரசுரிக்க எத்தனை பேரால் முடிகின்றது.

☐ **நூல்களின் விலைகள்**

ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவிய, சிற்பக் கண்காட்சி யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் 1989-ம் ஆண்டு அக்டோபர் 28, 29 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

கண்காட்சியைப் பார்வையிடுவதோடு "அரிதான" நூல்கள் சிலவற்றையாவது வாங்கலாம் என்று போனால் கசப்பான அனுபவங்களே கிடைத்தன.

நூல் கண்காட்சி எப்படி முழுமையாக இல்லையோ [பல நூல்கள் இல்லைத்தானே] அதே போலத்தான் நூல்களும் வாங்க முடியவில்லை.

சாந்தன், நந்தி போன்றோரின் சில பழைய நூல்கள் விற்பனைக்கு இருந்தன. (நூல்கள் விற்பனை செய்தவர்கள் கண்காட்சியை ஒழுங்கு செய்தவர்கள் அல்ல). ஆனால் அவற்றின் விலைகளில் சில தில்லுமுல்லுகள்.

கடுகு என்ற சாந்தனின் குறுங் கதைத் தொகுப்பு உண்மையில் ஒரு ரூபா .. அதனை அழித்து விட்டு இரண்டு ரூபாவுக்கு விற்றார்கள்! இது யாருடைய தவறு? அப்படியே நந்தியின் சிறுகதைத் தொகுப்பும் விலை மாற்றம் செய்யப்பட்டிருந்தது.

இந்த நூல்கள் எல்லாம் எப்போதோ பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படாமல் இருந்தவை. பலசரக்குக் கடைக்காரர்கள் மா, அரிசி, சீனிக்கு விலை ஏற்றுவது போல இவர்களும் நூல்களையும் நினைத்து விட்டார்களா?

இதே போலத்தான் யோ. பெனடிக்ற் பாலன் எழுதிய சொந்தக்காரன் டிசம்பர் 1968ல் இந்தியாவில் வெளியானது. அதன் உண்மை விலையை நூலில் கண்டு பிடிக்க முடியவில்லை. காரணம் கறுப்பு மைபூசி அழிக்கப்பட்டு இருந்தது.

சில மாதங்களுக்கு முன்னர் 28/- கொடுத்து ஒரு புத்தக சாலையில் வாங்கியாகி விட்டது. அதன் பின்னர் தான் தெரிந்தது. அதன் விலை இலங்கைப் பணத்தில் 13-50 (பதின் மூன்று ரூபா ஐம்பது சதம்) என்று கொழும்பில் அந்த விலைக்கே நண்பர். ஒருவர் வாங்கினார். சஞ்சிகை ஒன்றில் பிரசுரமான புத்தகப் பட்டியலிலும் அறிய முடிந்தது.

ஏன் இந்த அநியாயம்? சம்பந்தப்பட்டவர்கள் பதில் சொல்வார்களா? ☐

# பொது அறிவுப் போட்டி இல. 7ற்கான விடைகள்

1. இலங்கை வங்கி 2. பிரான்ஸ் 3. றேடியம்
4. வால்ட் டிஸ்னி 5. பாகிஸ்தான் 6. ஆஸ்திரியா
7. திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா 8. விம்பிள்டன்
9. ஸ்பெயின் 10. வண்ணத்துப்பூச்சி

## பொது அறிவுப்போட்டி இல. 7ற்கான முடிவுகள்

முதலாம் பரிசு
கு. செல்வனேஸ்வரன்
பூனாறி ஒழுங்கை
சொண வடலி,

இரண்டாம் பரிசு
த. விஜயானந்தன்
71/6, நாச்சிமார் கோவில் வீதி,
யாழ்ப்பாணம்

மூன்றாம் பரிசு
செல்வி கு. பூங்கோதை
104, சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில்.

## பொது அறிவுப் போட்டி இலக்கம் 8 அடுத்த இதழில் இடம்பெறும்

**க**னவுகள்;

ஒரு தூக்கம், தூக்கத்தில் எத்தனை நிகழ்வுகள். சந்தோசம், துக்கம், பயங்கரம் என்று தூக்கத்தில் எத்தனை நிகழ்வுகள் அவை தான் கனவுகள். அதாவது தூக்கத்தி லிருக்கையில் இயற்கையில் ஒருநிகழ்வு நிகழ்வ தாக தோன்றும் ஒரு மீட்டல் நிகழ்ச்சியே கனவு. உயிருள்ள மனிதனின் மூளையில் 1000,000,000 நிகழ்வுகள் சேமிக்கப்பட்டுள் ளன. நாம் தூங்குகையில் அந் நிகழ்வுகளில் ஒரு சில நிகழ்வுகள் மூளையினால் மீட்கப் படுவதே கனவு ஆகும் இந்தக் கனவுகள் பற்றி நீங் களும் அறிந்து கொள்ளுங்களேன்.

பேசிக் கொண்டிருந்தால், கடும் குளிராக இருந்தால் கனவுகாணின் அவ்வேளை நமது உடல் அதிகமாக அத்தாக்கத்தை உணராது. கனவு காணாதிருப்பின் நிச்சயம் அவற்றின் தொல்லையால் தூங்குவது கடினம். நாம் ஒரு பயங்கரக்கனவு காண்கிறோம். அதில் ஒரு பயங்கர நிகழ்வு ஏற்படுகையில் ''ஐயோ அம்மா'' என விழித்துக் கொள்கிறோம். இது எப்படி நிகழ்கிறது தெரியுமா? நமக்கு மூச்சுவிடக் கஷ்டமாக இருக்கும் வேளை ஒரு அவதி வேளையில் இப்படிப் பயங்கரக் கனவுகள் தோன்றும். இதன் உச்சக்கட்டத் தில் நம்மால் உடற்கோளாறைக் கட்டுப் படுத்த முடியாமல் கத்திவிடுகிறோம்' ஆகவே மூச்சு சம்பந்தமான சளித்தொல்லை இருக்கும் வேளையில் பயங்கர கனவு காண் பவர்களுக்கு இத் தொல்லை இருக்கும் என அமெரிக்க உளவியல நிஞான கிறிஸ்டோ பர் ஈவன்ஸ் என்பவரின் 'இரவில் தூங்கக் கோலங்கள்' என்ற தூக்கம் பற்றிய உள வியல் நூல் கூறுகின்றது.

உளவியல்
உளவியல்
உளவியல்
உளவியல்
உளவியல்
உளவியல்
உளவியல்

## கனவு காணும் வாழ்க்கை

கனவுகள் கூடுதலாக நாம் தூக்த்தில் ஆழ்ந்த ஆரம்பிக்கும் வேளையிலே தொடங்கிவிடும் மீண்டும் தூக்கத்திலிருந்து விழிக்கும் வரையில் தொடர்ந்து வரும் ஆனால் நம் தூக்கத்தில் முழுதும் ஒரேகனவு மட்டும் தொடர்ந்து வராது. சரா சரியாக நான்கு அரைக் கனவுகள் ஒரு இரவுத் தூக்கத்தில் வரும், ஒவ்வொரு கனவிற் கும் இடையில் தொண்ணூறு நிமிட இடை வேளைகள் வரும்.

கனவில் ஒரு நிகழ்வு வெகு வேகமாக நிகழ்ந்து விடுவதில்லை. சாதாரணமாக ஒரு நிகழ்வு உண்மையாக நடக்க எவ்வளவு நேரம் எடுக்கின்றதோ அத்தனை நேரமே கனவிலும் எடுக்கும்.

☐ தி- தவபாலன் ☐

கனவு உலகில் உள்ள அத்தனை மனி தருக்கும் வரும். உளவியல் ஆய்வின்படி கட்டாயம் கனவு வந்தே தீரும்.

கனவுகள் நம்மை நிம்மதியாக தூங்க வைக்கின்றன. எப்படியெனில் கனவு இல்லா மல் இருப்பின் நமது செவிப்புலன், உணர் வுப்புலன் வெளியே நடக்கும் நிகழ்வுகளால் உறுத்தப்படும். அதாவது வெளியே யாரும்

இந்தக் கனவுகளினால் ஏற்படும் பலன் கள் என்ன தெரியுமா?

* நிம்மதியான நித்திரை

* நாம் வாழ்வில் நிகழமுடியா தகற்பனை நினைவுகளை கடைசி (at least) கனவிலா வது காணலாம் அல்லவா

* எதிர்கால நிகழ்வுகளை கனவில் காணலாம். இப்படி எதிர்கால நிகழ்வுகளை கனவில் கண்டு பலர் பயனடைந்திருக் கிறார்கள்,

பிரெட்ரிக் அகஸ்ட் எகுலே என்ற ஜேர்மன் தேச இரசாயனவியலறிஞர் 1865ல் ஒரு பாம்பின் தலை வாலைக் கடித்து வட்டமாக இருப்பதாக கனவில் கண்டார். இது 'பென்சீனில்' காபன் அமைந்துள்ள நிலையை (பென்சீன் வளையம்) அறிய உதவியதாம். இதன் உதவியால் கேகுலே செயற்கைச் சாயத்தை தயாரித்தாராம். பிற்காலத்தில் சேதன இரசாயனத்தில் (organic chemistry) இந்தக் கனவு ஒரு புரட்சியையே ஏற்படுத்தியது.

பிரித்தானிய கணிதவியலறிஞரான 'பெர்ட்ரான்ட்ரஸ்ஸெல் என்பவருக்கு விடைகள் கிடைக்காத கணக்குகளுக்கு கனவுகள் மூலம் விடைகள் கிடைத்தனவாம்.

பிரபல, மறைந்த ஆங்கில நாவலாசிரியரான எராபேட் லூயிஸ் ஸ்டீவின்சன் ஒரு கனவு கண்டார். அந்தக் கனவுதான் அவரது 'டொக்டர் ஜெகில் அன்ட் மிஸ்டர் ஹைடி' என்ற நாவலாயிற்றாம்.

'கிரகாம் கிரீன்' என்ற நாவலாசிரியருக்கு 'தப்பும் வழிகள்' (ways of escape) என்ற நூல் எழுத உதவியது கனவுகளே என தனது சுய வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார்.

இப்படி சில நனவு நன்மைகளையும் கனவுகள் செய்திருக்கின்றன. கனவுகள் ஆறறிவு படைத்த மனிதனிற்கு மட்டும் சொந்தமானதல்ல. ஐந்தறிவுடைய மூளை கொண்ட உயிரினங்களுககும் சொந்தமான" வை.

உங்கள் செல்லப் பிராணியான நாயை எடுத்துக் கொள்ளுங்கள். அது ஆழ்ந்த தூக்கத்திலிருக்கும். தூக்கத்திலிருந்தவாறே பலமாகக் குரைக்கும், நேசத்துடன் வாலை ஆட்டும், ஓடுவது போல் பாவனை செய்யும், இவையெல்லாம் அவற்றின் கனவில் நிகழும் நிகழ்ச்சியே.

இதே போலவே பூனையும், குதிரையின் கனைப்பும் அதன் கனவே. இப்படி அனைத்து விலங்குகளும் கனவு காண்கின்றன.

அவுஸ்திரேலியாவில் 'எறும்பு தின்னி' என்ற விலங்கினம் உள்ளது. இவற்றின் உணவு எறும்புகளே, அதனால் தான் எறும்பு தின்னி எனப்படுகிறது. இதன் மூளை தான் உலகில் அதிகளவு தகவல்களைச் சேர்த்து வைக்கக் கூடியது. மனிதனை விடவும் கூடுதலான தகவல்கள் இதன் மூளையில் சேமிக்கப்படுகிறது இதனால் உலகில் அதிகளவு கனவு காணும் விலங்கு இந்த எறும்பு தின்னிதான் என அமெரிக்க உளவியல் அறிஞர் 'வின்சன்' என்பவர் கூறுகின்றார். இதே போல 'ஹிப்போகம்பஸ் என்ற குதிரை ஒரு நிகழ்வை மட்டும் மனதில் பதிவு செய்யுமாம். இது மறைய மூன்று ஆண்டுகள் செல்லும். அதாவது கடல் குதிரை மூன்று ஆண்டுகளுக்கு ஒரே கனவையே காணும் இதையும் 'வின்சன்' கூறுகின்றார்.

இப்படி கனவுகள் மனிதனிற்கு மட்டும் உரித்தானதல்ல. விலங்குகளுக்கும் சொந்தமானது.

பலர் கனவுகள் இன்று வரக்கூடாது ஆண்டவரே எனப் பிராத்திப்பீர்கள். நிம்மதியான தூக்கம் தரும் கனவுகளை ஏன் வேண்டாம் என்கின்றீர்கள். இக்கட்டுரையைப் படித்தாவது கனவின் அருமையைப் புரிந்து கொள்ளுங்கள்.

ஆனால் ஒன்று நீங்கள் கனவு வரக் கூடாது எனக் கடவுளை வேண்டினாலும் கனவு வந்தே தீரும். "ஆகையால் கனவுகளே கலைந்து செல்லுங்கள்" என வேண்டாதீர்கள். □

> இன்று நீங்கள் செய்யமுடிந்ததைச் செய்யுங்கள். ஏனெனில் இன்றைய ஒரு வெற்றி நாளைய இரு வெற்றிகளுக்குச் சமம். — இவாரல்ஸ்

**இணுவையூர்**

## சிதம்பர திருச்செந்திநாதன்

**எழுதும்**

**தொடர் நவீனம்**

# 4

**சை**க்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டபோது காலை ஏழரையாகி விட்டது. சைக்கிளில் பிசாசு ஓட்டம் ஓடினால் தான் ரவுண் போய்ச் சேரலாம். எட்டு மணிக்கு முதலாளி பரமசிவத்தின் முக தரிசனம் செய்யலாம்.

வெள்ளை உடை அணிந்த சிறுமிகள் புன்சிரிப்பு பூத்த முகங்களுடன் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தார்கள். பாடசாலை மாணவர்கள் நிறைந்த மினி வான் ஒன்று மெதுவாகச் சென்றது.

ஞானரூபன் தங்கள் கேற்றைத் தாண்டி ஒழுங்கையினுள் இறங்கியபோது எதேச்சையாக எதிர் வீட்டின் பக்கம் பார்வை சென்றது.

ஞானரூபனுக்குக் கையைக் காட்டிக் கொண்டு அவனை நோக்கி ஓடி வந்தாள் பிரியா. ஞானரூபன் சைக்கிளை நிறுத்தினான்.

''வேலைக்கு வெளிக்கிட்டாச்சோ'' எனக் கேட்டாள் அவள்.

அவள் முகம் பளிச்சென்று இருந்தது. தலையை முழுமையாக வாரி உயர்த்திக் கொண்டை போட்டிருந்தாள். கடுஞ் சிவப்பில் பெனியனும் கறுத்த மிடியும் அவளுக்கு ஒரு வசீகரத்தை ஏற்படுத்தியிருந்தது. ஒரு செக்கனில் ஓராயிரம் முறை துடிக்கும் விழிச் சிறகுகளுடன் கன்னக் கறுப்புகளில் செழுமை மின்னியது.

கையில் அகலமான பிளாஸ்டிக் வளையல்கள் போட்டிருந்தாள். நீண்ட விரல்களின் நுனியில் றேஸ் கலரில் நெயில் பொலிஸ் பளபளத்தது.

அப்போது தான் அவள் குளித்திருக்க வேண்டும். அவளது அண்மையும், சோப் வாசனையும், இயல்பான கவர்ச்சியும் சேர்ந்து ஞானரூபனை செயல் இழக்கச் செய்து விட்டன.

அவள் பதில் சொல்லாமல் அவளையே பார்த்தான். ''என்ன யோசினை?'' எனக் கேட்டாள் அவள். முகம் றோஜாவாகப் பூத்திருந்தது.


''ம்'' என்றான் அவன்.

''வேலைக்குத் தானே போறியள்?'' என்றாள் மீண்டும்.

''ம்''

''உங்கடை கடையில நெயில் பொலிஸ் இருக்கும் தானே?''

''ஓ''



"மரூன் கலர் இருக்குமே?"

"இருக்க வேணும்"

"இருந்தால் ஒண்டு வேண்டிக் கொண்டு வாங்கோ ப்ளீஸ். நான் இண்டைக்கு ரவுணுக்குப் போக இருந்தனான். ஆனால் இப்ப என்ரை பிரண்ட் வந்திருக்கிறா அவளோடை காங்கேசன்துறைக்கு போக வேணும். அதுதான் உங்களைப் பார்த்துக் கொண்டு நிண்டனான்." என்றாள் அவள்.

கிளில் பயணப்பட்டான். ஒழுங்கையில் இருந்து பிரதான வீதிக்கு வரும் வரை அவன் ஏதோ அந்தரத்தில் மிதப்பது போன்ற ஒருவகை உணர்வில் இருந்தான்.

சுயநினைவுக்கு வர சில நிமிடங்கள் எடுத்தன. அதன் பின்னர் தான் பிரியா கொடுத்த காசை எடுத்துப் பார்த்தான். நிச்சயமாக மரூன்கலர் நெயில் பொலிஸ் வாங்க அவள் கொடுத்த காசு காணாது. ஐந்தோ பத்தோ, அவன் தலையில் பொலுக்கத்தான் போகின்றது.

## நீ

பாழ் வெளியின்
மௌனம் கலைத்து எழு.

ஜன்னல் பார்வை
விலக்கி
சூரியனில் நுழை.

மலரில் புணர்ந்த
காற்றின் சுகத்தில்;
பிறையின் ஒளிக் குளிர்வில்
தேக்கமென்பதை மற.

கோடுகளாய்த் தடைகளில்
வீழ்வினும்
உன்னிலை உணர்-
முனைப்புறு.
புள்ளியாய்க் கருவுண்டு
புரி.

மெய்யுணரும் விழியால்
இருளைச் சுடு.

சுமை தொலைத்து
தடைகளற்ற சுவாசத்தில்
சுதந்திரம் பொழி

இருத்தல் உணர்ந்த
மனிதன் நீ.

எஸ். கருணாகரன்

---

"இந்தாங்கோ" என அவள் நீட்டிய காசை உணர்வில்லாமல் வாங்கிக் கொண்டான்.

"பின்னேரம் மறக்காமல் வாங்கிக் கொண்டு வாங்கோ." என்ற அவள் குரலில் கெஞ்சல் வெளிப்பட்டது.

"ஓம்" என்று முணுமுணுத்தான் ஞானரூபன்.

அவள் வந்த வேகத்திலேயே விரைந்து ஓடி விட்டாள். ஞானரூபன் மீண்டும் சைக்

இது முதற்தடவை அல்ல. இப்படிப் பல தடவை நடந்துவிட்டது. வீட்டுக்குக் குடி புகுந்த முதல் நாளில் எப்படி ஞானரூபனிடம் பேச்சுக் கொடுத்தாளோ அதே போல அடுத்த நாள் உதவிக்கு வந்துவிட்டாள்.

சிலவேளை காசில்லாமல் கூடச் சில பொருட்களை வாங்கிக் கொடுத்த சம்பவங்கள் உண்டு. இதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என எத்தனையோ தடவை நினைத்துக் கொண்டாலும் அவள் மின்ன

லெனத் தோன்றி விழிகளால்வெட்டி இழுத்துப் பேசும் போது எல்லா நினைவும் உறுதிப்பாடுகளும் பொல பொல வென உதிர்ந்து விடும். பரவசம் அவனைத் தொற்றிக் கொள்ளும். இனம் தெரியாத ஒருவகை பூரிப்பு பொங்கிக் கொள்ளும்.

சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் அவள்ஏதோபடிப்பதாகச்சொல்லிக்கொண்டு ரவுணுக்கு வருவாள். அப்படி வரும் நாட்களில்அனேகமாக சனிக்கிழமைகளில் ஞானரூபனின் கடைக்கு வருவதும் உண்டு.

முதல் முறையாக அவள் பிரகாசமாக மின்னும் விழிகளுடன் குளிர்மையான பார்வைகளை எறிந்து கொண்டு வந்த போது ஞானரூபன் மெய்மறந்து போனான்.

தவலிங்கம் அறிந்த போது ஒரு நாள் சொன்னான் ''நீ என்னடா மடையனா? உனக்கு ஏன் தேவையில்லாத வேலை. இரண்டு மூண்டு நாளைக்குக் கூப்பிட்டாலும் தெரியாத மாதிரிப் போ. பிறகு அவள் உன்னைக் கூப்பிடமாட்டாள். நீ உழைக்கிறது உன்ரை செலவுக்கே காணாது. பிறகு எப்பிடி அவளுக்கு உபகாரம் செய்கிறது''.

ஞானரூபன் அவன் சொன்னதை அப்போது அப்படியே கேட்டான். பிறகொரு நாளும் அவளைப் பற்றி அவள் குடும்பத்தைப் பற்றி தவலிங்கம் சொன்னான்.

''அந்தக் குடும்பம் அவ்வளவு நல்ல குடும்பம் இல்லையடாப்பா. தேப்பனைப் பற்றி உனக்குத் தெரியும் தானே. அந்த மனிசனுக்கு ஊரெல்லாம் கடன். ஆள் மற்றவையைத் தட்டிச்சுத்திறதில நம்பவண் ஆள். தேப்பனுக்கேத்த மாதிரிப் பிள்ளையள் பெண்சாதி எல்லாம். சிலகுடும்பங்களில் எல்லாம் ஒரே மாதிரி பொருந்திறது வேடிக்கையான விசயம்தான். தாயோ பிள்ளையளோ வெளிக்கிட்டு றோட்டில போனால் பாரன் எவ்வளவு கொண்டிசனாய் போயினம் எண்டு. சில ஆட்கள் உப்பிடித்தான். வடிவாய் சாப்பிடாட்டியும் றோஸ் பவுடர் பூசிக் கொண்டு வெளிக்கிட்டால் காணும் எண்டு நினைக்கினம். மற்றவன்கள் பின்னால நிண்டு குற்றம் குறை சொன்னாலும் பரவாயில்லை. மற்றவையின்ரை கண்களைக் கவர்ந்திழுக்கிற மாதிரிப் போனால் நல்லது எண்டதும் அவையின்ரை நினைப்பு''

அதெல்லாம் இப்போது நினைவுக்கு வந்தது. நெயில் பொலிஸ் வாங்க காசு தந்ததும், தந்த காசை எண்ணிப் பார்த்து மிகுதியைகேட்காமல் விட்டது எதனால் என்ற எண்ணமும் அப்போது ஏற்பட்டது. நிச்சயமாக பின்னேரம் அதனைக் கொண்டு போய்க் கொடுக்கும் போதாவது கேட்பது என்பது இயலாத காரியம். கட்டாயம் நான் கேட்கமாட்டேன் எனவும் அப்போது நினைத்தான்.

முதல் நாள் கடையால் வீடு திரும்பும் போது எதிர் வீட்டு வாசலில் நின்றவரின் ஞாபகம் வந்தது.

இடுப்பிலே வேட்டி, தோளிலே துவாய், சேட்டு அணியாத வெற்றுடம்பு சகிதம் அந்த மனிதர் காணப்பட்டார். சண்முகம் வீட்டாக்கள் முன்பு இருந்த இடத்திற்குக் கிட்ட அந்த மனிதர் ஒரு சிறிய கடை வைத்திருந்தாராம்.

சில்லறை சில்லறையாக சாமான்கள் வாங்கி ஒரு பெருந்தொகை அவருக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. இன்று தருகின்றோம் நாளை தருகின்றோம் எனச் சொல்லிச்சொல்லி வீடு மாறி வந்துவிட்டார்கள்.

மிகவும் கஷ்ட நிலையில் இருந்த அந்த மனிதர் எப்படியோ விசாரித்து பொழுது மங்குகின்ற நேரத்தில் இங்கு வந்து சேர்ந்து தனக்கு வர வேண்டிய வருமதியைப் பற்றிக் கேட்டார். அவரின் தாழ்மையான விண்ணப்பத்திற்கு பலன் கிட்டவில்லை.

சண்முகத்தின் மனைவியும் பிள்ளைகளும் அந்த மனிதரின் ஏழ்மையை, அவரது பணத் தேவையினைப் புரிந்து கொள்ளாமல் வீண்கதை கதைக்கத் தொடங்கியிருக்க வேண்டும். போதாக் குறைக்கு! வெறியோடு வந்த சண்முகமும் சேர காசு கேட்டு வந்த மனிதர் வார்த்தைகளால தாக்கப்பட்டார்.

காசின் தேவை, அது கிடைக்காததால் எழுந்த ஏமாற்றம், அவர்களின் கீழ்த்தரமான கதைகள் எல்லாம் சேர்ந்து அந்த மனி

## ஹைக்கூ கவிதைகள் 5

☐ **வனப்பின் வனம**

இடையிடை வெண்துகள்கள்
முழுவதுமாய் குருதிக்
கொப்பளிப்பு— பிணக்காடு

☐ **நம் நகரம்**

மாலையிடுவதற்கு மங்கையர்
பலரும்— காத்திருந்தனர்
இளைஞர்களில்லாத நகரத்துக்கு

☐ **நிகழ்வின் பூக்கள்**

வெண்பூக்களின் மழை
மண்ணில் மலர் மெத்தையாகின
உதிர்காலம்— பூத்தது

☐ **விதையல்**

காகங்களின் எச்சங்களில்
முளைத்தன விதைகள்
வீரியமிக்க கழிவு

☐ **மானிடம்**

காலையில் கடன்
மாலையில் சுமை
இரவில் உயிருள்ள பிணமாக.

-யாழூர்-இளங்குயில்

தரின் தன்மானத்தினை சுய உணர்வை மீறச் செய்திருக்க வேண்டும்.

வேதனை குழப்பம் எல்லாம் சேர்ந்து அவரைக் குழப்ப அவர் பேசிக்கொண்டு இருந்தார். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் காதுகளில் விழவேண்டும் என்பதற்காக பெலத்துக் கத்தியிருக்கின்றார், பிறகு களைத்துப் போய் விட்டார்.

ஞானரூபன் வீட்டுக்குப் போய் உடுப்புகளை மாற்றிக் கொண்டு கிணற்றடிக்கு வந்தான்.

இன்னமும் எதிர்வீட்டின் வாசலில் அந்த மனிதர் நின்றுகொண்டிருந்தார். ஞானரூபன் கிணற்றுக் கட்டில் ஏறி நின்று வேலிக்கு மேலால் வீட்டைப் பார்க்க முனைந்தான். பிரகாசமான வெளிச்சம் தெரிந்ததே தவிர ஆட்களைக் காணமுடியவில்லை.

"உங்களை உங்கடை கதையளை நம்பித்தான் நான் கடன் தந்தனான். என்னட்டை இருக்கிறதே கொஞ்ச முதல்தான். அதை வைச்சுக் கொண்டு கடை நடத்தேலாமல் கடன்பட்டுத்தான் கடை நடத்திறன். வட்டிக் காசு போக வாறது ஒரு நேரக் கஞ்சிக்குத் தான் காணும். அதையும் மண் விழுத்திப் போட்டியள். என்ரை நெஞ்சு படுகிற வேதினை உங்களுக்கு விளங்காது தான்," என்று அந்த மனிதர் சொன்னது இருள் சூழ்ந்த நிசப்தமான அந்த நேரத்தில் வெகு துல்லியமாகக் கேட்டது.

ஒழுங்கையால் போன இரண்டொருவர் அந்த மனிதரிடம் என்ன நடந்தது என்று விசாரிப்பதும் அதற்கு பதில் சொல்வதும் கேட்டன.

யாரும் உள்ளே போகவில்லை. சண்முகத்தின் உண்மை நிலை புரிந்தவர்களாக இருக்க வேண்டும். வந்தவருக்கு ஆறுதல் சொல்லி அனுப்பிவிட்டார்கள்.

ஞானரூபன் கிணற்றடியில் யோசனையில் ஆழ்ந்து போனான். சண்முகத்தின் மீது, அவரின் குடும்பத்தின் மீது, பிரதீபா மீது, என்று எல்லாரின் மீதும் வெறுப்பு உண்டானது.

அந்தக் கடைக்கார மனிதரைப் போல எத்தனை மனிதர்களை சண்முகமும், குடும்பத்தினரும் ஏமாற்றி இருப்பார்கள், ஏமாற்றிக் கொண்டு இருக்கின்றார்கள். இனிமேல் இவர்களுக்கு எந்த உதவியாவது செய்யக் கூடாது. அது யாராக இருந்தால் என்ன. பிரியாவாக இருந்தாற்கூட என்று தான் முடிவு செய்திருந்தான்.

ஆனால் அந்த உறுதிப்பாடு காலையில் கரைந்து உருத் தெரியாமல் போய்விட்டது. வீட்டை வீட்டுப் புறப்படும் போது எதிர்வீட்டைப் பார்க்காமல் போக முடியாமற் போனதுஏன்? எனவும் அவன் அப்போது தனக்குள்கேள்வியை எழுப்பிக்கொண்டான்.

பிரியாவைக் கண்டதும் என்னமாதிரி உடலும் உள்ளமும் திப்பிடித்துக் கொண்டது போல பரபரப்பு அடைகிறது. அவள் சிக்னலைக் கண்டு நின்றதும் கதைத்ததும், நெயில் பொலிஸ் வாங்க பணம் வாங்கிக் கொண்டதும் எதனால்? ஞானரூபன் தனக்குள் குமைந்து கொண்டான்.

கடைக்குப்போய்ச்சேர எட்டரை மணியாகிவிட்டது. என்னதான் ''கண்டறியாத வேலை'' என மனம் சொல்லிக் கொண்டாலும் நேரம் போய் விட்டதால் மனம் பதட்டப்படத் தொடங்கியது.

நல்ல காலம் முதலாளி பரமசிவம் கடையில் இருக்கவில்லை. இராமநாதர் தான் முழிப்பாகத் தெரியும் சந்தனப் பொட்டுடன் சாமியாராக அமர்ந்திருந்தார்.

ஞானரூபன் கடைப்படியேற காயத்திரி கல்யாணி, கணேசன் எல்லோரும் வந்திருந்தார்கள். எல்லோரும் நேரத்திற்கு வந்திருக்கும் போது தான் பிந்திப் போவது அவனுக்கு சங்கடமாக இருந்தது.

''வாடாப்பா- நல்லகாலம் மூனா இல்லை. இருந்திருந்தால் உனக்கு நல்ல மங்களம் நடந்திருக்கும்'' என்ற இராமநாதரைப் பார்த்து ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்தான்.

சேட்டின் முதுகுப் பக்கம் வியர்வையில் குளித்திருந்தது. ''பானை'' வேகமாக்கி விட்டு அதன் அருகில் போய் நின்றுகொண்டு காயத்திரியைப் பார்த்தான்.

அவள்முகம் எப்போதும் போல மலர்ச்சியாக இருக்கவில்லை. சாடையாக சோக இருள் கவிந்திருந்தது விழியோரங்களில் ஈரம் பளபளத்தது,

ஞானரூபன் விடாமல் அவளையே பார்த்தான். அவளும் உணர்ந்து மெல்லியதாக ஒரு புன்னகையைப் பரவ விட்டாள். வழக்கமான புன்னகை போல அது சோபிக்கவில்லை.

இராமநாதர் பேப்பர் வாசிக்கத் தொடங்கினார். ஞானரூபன் வியர்வையினைமறந்து காயத்திரி அருகில் வந்தான். ''என்ன பிரச்சனை?'' என்று கேட்ட அவனில் ஆர்வம் மிகுந்திருந்தது.

காயத்திரி சில கணங்கள் அவனைப் பார்வையினால் ஊடுருவினாள். அவன் கேள்விக்குப் பதில் சொல்லுவதா? விடுவதா? என அவள் யோசித்திருக்க வேண்டும்.

அவன் வந்த நாள் தொடக்கம் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவள் அவனுடன் கதைத்துக் கதைத்து தன் குடும்ப விடயங்களையெல்லாம் சொல்லி மனம் ஆறியிருக்கிறாள்.

குமுறி எழும் மன உணர்வுகளை யாரிடமாவது சொல்லிச் சுமையை இறக்க வேண்டும் போல இருக்கும் நேரங்களில் எல்லாம் அவளுக்கு வசதியாக யாரும் கிடைத்ததில்லை. வீட்டில் அவனது சோகக் கதைகளை விட வலுவான துன்பமான விடயங்கள் அதிகம்.

பஸ்சில் போகும் போதும், வரும்போதும் கூட வரும் சினேகிதிகள் யாருடனாவது கதைக்கலாம் என்றால் கூட காலம் ஒத்துழைப்பதில்லை. வீட்டின் அயலில் உள்ள சிநேகிதிகள் கூட எப்போதும் சந்திக்கமாட்டார்கள். ஞாயிறு விடுமுறை நாட்களில் தான், அது கூட முடியும். எனவேதான் ஞானரூபன் அவளது மனச்சுமையைக் கேட்கும் பங்காளியாகி விட்டான்.

வீட்டில் ஆண் சகோதரங்கள் இல்லை. இருக்கும் சொந்தக்கார ஆண்கள் கூட எப்போதாவதுதான் தலை நீட்டுவார்கள்

காயத்திரிக்கு வேறு வழி கிடைக்கவில்லை' ''ஏன் ஒரு மாதிரி இருக்கிறியள்? என்ன பிரச்சனை?'' என்றான் மீண்டும் ஞானரூபன்

''என்னத்தைச் சொல்லுறது; குடும்பக் கஸ்டம் ஒரு பக்கம். குடி முத்திப்போன ஐயா மற்றப்பக்கம். எப்படி இருக்கும் எங்கடை நிலைமை. ஆர் என்னதான் பழகினால் என்ன குடிக்க மாத்திரம் பழகக்கூடாது. வெறி கூடினால் பிள்ளை எண்ட மரியாதையோ, பெண்சாதி எண்ட பற்றுதலோ என்ன மாதிரி இல்லாமற் போகுது!'' என்றாள் காயத்திரி.

ஞானரூபனுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. ''தான் தண்ணியடிப்பது இவளுக்கு தெரியுமா?'' என ஒரு தடவையோசித்தான்.

''நேற்றைக்குப் பின்னேரம் வீட்டை போகேக்க வீட்டு வாசலில் முழுவியளம் ஐயா தான். அதுவும் நிறைவெறி. குடிச்சது காணாதெண்டு, போய் படலையைத் திறக்க, குடிக்கக் காசுகேட்டார். என்னட்ட எங்க காசு. சீசன் ரிக்கட்டோடை திரியிற நான் ஆரிட்டை காசுக்குப் போறது? இல்லை எண்டன். வேலைக்குப் போற உன்னட்டை இல்லாட்டி ஆரிட்டை இருக்கப் போகுது எண்டார்'.

''ம்'' என்று கதை கேட்டான் ஞானரூபன்.

''இன்னும் சம்பளம் எடுக்கேல்லை. மாதம் முடியத்தானே சம்பளம் வரும் எண்டு சொன்னது அவருக்குப் பிடிக்கேல்லை. பெரிசாய் சத்தம் போட்டுக் கத்தத் தொடங்கி விட்டார். பெரிசாய் வேலை வேலை எண்டு காலமை வெளிக்கிட்டு போறாய் கோடி ஒரு அஞ்சு சதத்துக்கு வழியில்லை எண்டார்

ஐயா சத்தம்போடாதேங்கோ. ஒழுங்கையில ஆட்கள் எண்டுசொன்னன். ஆட்கள் நின்டால் என்ன? உனக்கு மானம், ரோசம் இருந்தால் காசைத் தாவன். ஏதோ பெத்த தேப்பன் எனக்கு கனக்க தந்து முறிஞ்சு போனியளே எண்டு பேந்தும் சத்தம் போட்டார். ஐயா சத்தம் போடாதேயுங்கோ. ஒழுங்கையில் ஆட்கள் எண்டு சொன்னன். பேந்தும் சத்தம் போட்டார். ஐயா சத்தம் போடாதேயுங்கோ எண்டு திரும்பத் திரும்பச் சொல்லச் சொல்ல அவருக்குக் கோபம் வந்துட்டுது. நீங்கள் என்னடி வேலைக்குப் போறனீங்களோ மாப்பிள்ளை பிடிக்கப் போறனீங்களோ எண்டார்.'' என்று சொன்ன காயத்திரியின் கண்கள் கலங்கியிருந்தன.

(தொடரும்)

சகலவித ஆங்கில மருந்து வகைகள் பால்மா வகைகள் அனைத்திற்கும்

நிதான விலையில் தரமான வகையில்

சனி — ஞாயிறு உட்பட சகல தினங்களிலும் பெற்றுக் கொள்ள

வசந்தாபார்மஸி

அன் ஸ்ரோசரீஸ்

280, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

# சர்வதேச கிரிகெட் வெற்றிகள் இலங்கைக்குச் சாத்தியமா



சென்ற அக்டோபர் மாதம் இந்தியாவில் நடைபெற்ற ஜவகர்லால் நேரு கிண்ணத்திற்கான கிரிக்கற் சுற்றுப் போட்டியில் இலங்கை அணி இறுதி இடத்தினையே பெற முடிந்தது. மேற்கிந்தியத் தீவுகள் அணியை அதிசயிக்கத்தக்க வகையில் வெற்றி கொண்ட இலங்கை, ஏனைய போட்டிகளிலும் சிறப்பாக ஆடினாலும் வெற்றி வாய்ப்பினைக் கோட்டை விட்டது. பந்து தடுப்பில் அசகாய சூரர்களாகவிளங்கிய இலங்கைவீரர்கள் துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் உச்ச திறமையைக் காட்டத் தவறினர்.

ஆரம்ப நாட்களிலிருந்தே எம். சதாசிவம், ரொனி ஒபேத்தா (Tony opatha) டேவிட் கெயின் (David Heyn) எச். ஐ. கே. பெர்ணாண்டோ அனுரா தென்னக்கோன். மைக்கல் திசரா போன்ற சிறந்த கிரிக்கெட் வீரர்களை உருவாக்கிய இலங்கை 1982-ல் ரெஸ்ற் அந்தஸ்தைப் (Test Status) பெற்ற பின்னர் அடைந்த முன்னேற்றத்தை அளவிடுகின்றபோது ஓரளவு ஏமாற்றமே அடையவேண்டியுள்ளது. பந்துலவர்ணபுர (Bandula Warnapura) தலைமையில் பிளச்சர் தலைமை யிலான இங்கிலாந்து அணிக்கெதிராக P. சரவணமுத்து மைதானத்தில் (Oval) ஆடிய முதல் ரெஸ்ற்றில் இலங்கை தோல்வியைத் தழுவினாலும் தன்னை ஓரளவு வெளிக் காட்டத் தவறவில்லை. அதன் பின்னால் ஆடிய சுமார் 25 ரெஸ்ற் போட்டிகளில் இரண்டில் மட்டுமே இலங்கைவெற்றி பெற்றது. அவ்விரு போட்டிகளும் இலங்கையில் நடைபெற்றவையாகும்.

**● வை. சிவநேசன் ●**

துலிப் மெண்டிஸின் (பந்துலவர்ணபுரவின் தென்னாபிரிக்க விஜயத்தையடுத்து தலைமைப் பதவி கிடைத்தது) இலங்கை அணி 1985-ல் 'சரா' ஸ்ரேடியத்தில் இந்திய அணியை 149 ஓட்டங்களால் தோற்கடித்து தன்

முதல் ரெஸ்ற் வெற்றியை (14ம்ரெஸ்ற்) சம்பாதித்தது. "மொறட்டுவ "சிங்கம்" Lion of Moratuwa) என செல்லமாக அழைக்கப்படும் மெண்டிஸ் 1986ல் இம்ரான்கானின் பாகிஸ்தான் அணியை C. C. C. மைதானத்தில் மண் கவ்வச் செய்து எட்டுவிக்கெட்வெற்றியை இலங்கைக்குப் பெற்றுத் தந்தார். இவ்விரு விஜயங்களின் போது எதிரணித் தலைவர்களான கபில்தேவும், இம்ரான்கானும் இலங்கை நடுவர்கள் பற்றிக் கண்டனம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத் தக்கதாகும். தோல்வியுறும் அணிகளின் கப்டன்கள் பழியை நடுவர்களின் மேல் சுமத்துவது வழக்கமாயினும் இலங்கை நடுவர்களது "நடுநிலைத்தன்மை" விமர்சனத்துக்குரிய தொன்றாகவே இருந்து வந்துள்ளது. இலங்கை அணி திறமையை வெளிக்காட்ட மிகச்சிறந்த மார்க்கம் இலங்கைக்கு வெளியில் வெற்றிகளை ஈட்டுவதே ஆகும்.

ரெஸ்ற், ஒரு நாள் ஆட்டங்களில் இலங்கை அணியின் பெறுபேறுகள் இலங்கைக்கு அப்பால் மிக மோசமாகவே உள்ளன. ரெஸ்ற் போட்டிகளில் 1983ல் இந்திய அணிக்கெதிராக சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ஆடிய போட்டி, மற்றும் 1984ல் 'லோட்ஸ்' களத்தில் இங்கிலாந்திற்கெதிராக ஆடிய போட்டி தவிர அலைகடலுக்கு அப்பால் இலங்கை அணி இழந்தவையே அதிகம். 'சென்னை ரெஸ்ற்'ல் இலங்கை இந்தியாவிற்குச் சளைக்காத வகையில் ஆடியது. துலிப் மெண்டிஸ் இரு இன்னிங்ஸ்களிலும் 'சதம்' பெற்று சாதனை புரிந்தார். 'லோட்ஸ் ரெஸ்ற்' இலங்கையின் 'அதிரடி' யினால் புகழ் பெற்றது. இலங்கை 166 ஓவர்களில் 692 நிமிடங்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 491 ஓட்டங்களை டேவிட்கவர் தலைமையிலான இங்கிலாந்திற் கெதிராக பெற்றது. சிதத் வெத்திமுனி 190 ஓட்டங்களைக் குவித்தார்.

ஒருநாள் ஆட்டத்தில் திறமை மிக்கவர்களாக இலங்கை அணியினர் கருதப்பட்டாலும் 1986ல் இலங்கையில் நடைபெற்ற இரண்டாவது ஆசியக் கோப்பையே அவர்களின் குறிப்பிடத்தக்க ஒரு சாதனை ஆகும் (இந்திய அணி பங்கு கொள்ளவில்லை) ஏனைய ஒரு நாள் போட்டிகள் பெரும்பாலும் இலங்கைக்கு பாதகமாகவே அமைந்தன. 1975, 1979 ஆகிய முதலிரு உலகக் கிண்ணப் போட்டிகளில் உலகின் கவனத்தை ஈர்த்த இலங்கை 1983, 1987 போட்டிகளில் பலத்த நெருக்கடிகளை எதிர் கொண்டது. 1987 'றிலையன்ஸ்' உலக கிண்ணப் போட்டி தோல்விகள் மென்டிசை அணித் தலைமையினின்றும் ஒதுங்கச் செய்தன.

எதிரணியை நிலைகுலையச் செய்யும் குறைந்தது ஒரு பந்து வீச்சாளராவது இல்லாதிருப்பதே இதற்கு முக்கிய காரணமாகும். குறிப்பாக 'லெக் பிறேக்' (legbreak) பந்து வீச்சில் சிறந்து விளங்கிய சோமச் சந்திரடி – சில்வாவிற்குப் பிறகு ஒரு சுமாரான சுழல் பந்து வீச்சாளரைக் கூட இலங்கை அணியில் இடம் பெறச் செய்ய இயலவில்லை

டொன் அனுரசிறி, அசோக. டி. சில்வா, ரோஷான்யூரம்பதி எனப்பலர் வந்து சென்றாலும் டி. எஸ். டி. சில்வாவின் இடத்தை நிரப்ப இயலவில்லை. இவர் நியூசிலாந்திற்கெதிராக இலங்கை அணிக்கு ஒரு தொடரில் தலைமை தாங்கியதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். சுழல் பந்து வீச்சை சரியான முறையில் எதிர் கொள்ளும் இலங்கைத் துடுப்பாட்ட வீரர்களும் மிகச் சிலரே. ஒரு நாள் ஆட்டங்கள் உட்பட சுழல் பந்தின் முக்கியத்துவம் அதிகரித்துள்ள நிலையில் இலங்கைக்கு இது மிகப் பாதகமானதொரு காரணியாக விளங்குகின்றது.

வேகப் பந்து வீச்சிலும் காலத்திற்குக் காலம் அசந்தா டி மெல், றுமேஷ் ரட்னாயக்கா, ரவி ரட்னாயக்கா, சாலிய அகங்கம என்று பந்து வீச்சாளர்கள் ஓரளவு சிறப்பாகப் பந்து வீசினாலும் எவரும் நீண்டதொரு காலப் பகுதிக்கு இலங்கை அணிக்குக் கை கொடுக்கவில்லை, சிறந்த பந்து வீச்சாளர் ஒருவரை உருவாக்குவதென்பது துடுப்பாட்ட வீரர் ஒருவரை பயிற்றுவிப்பதைக் காட்டிலும் கடினமானதொரு பணியாகும். இக் காரணத்தினால் இலங்கை கிரிகெட் பயிற்சியாளர்கள்

துடுப்பாட்ட வீரர்களைத் தயார் செய்வதில் ஈடுபட்டுத் தம் பணியை இலகுவாக்கிக்கொள் கின்றனர். மேற்கிந்தியத் தீவுகளின் முன்னால் சகல துறை ஆட்டக்காரர் ஹாரி சோபர்ஸ், முன்னாள் இந்திய அணியின் சுழல் பந்து வீச்சாளர் பிரசன்னா போன்றோரைப் பயிற்சியாளர்களாக இலங்கை முன்னர் அழைத்திருந்தமையும் இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

மற்ற நாடுகளினின்றும் மாறுபட்ட வகையில் இலங்கையின் கிரிக்கெட் தெரிவுகள் பெரிதும் பாடசாலை மட்டத்திலேயே இடம் பெறுகின்றன. பாடசாலை மட்ட கிரிக்கெட்டின் (School level cricket) தரம் இலங்கையில் ஏனைய நாடுகளை விட உயர்வாகக் கொள்ளப்பட்டாலும் சடுதியாகப் போதிய அனுபவமின்றி சர்வதேச அரங்கினுள் "தள்ளப்படும் இலங்கை வீரர்கள் தாக்குப் பிடிக்க வியலாது தடுமாறுவதையும் காண முடிகின்றது. உள்ளூர் முதல்தர கிரிக்கெட் (First class cricket) தரம் போதாமையும் இதற்கு இன்னோர் காரணமாகும். இங்கிலாந்தின் (County) ஆட்டங்களுடனோ அவுஸ்திரேலியாவின் "ஷெப்பீல்ட் ஷீல்ட்" போட்டிகளுடனோ, அல்லது இந்தியாவின் ரஞ்சி கோப்பை ஆட்டங்களுடனோ எவ்வகையிலும் இலங்கையின் முதல் தர கிரிக்கட் போட்டிகள் ஒப்பிட வியலாதவை ஆகும்.

இலங்கை அணியின் பின்னடைவுகளுக்கு தொடர்ச்சியாக சர்வதேச போட்டிகளில் பங்கு கொள்ளாமையும் ஒரு பிரதான காரணமாகும், ரெஸ்ற் அந்தஸ்து பெற்ற கடந்த எட்டு ஆண்டுகளில் இருபத்தாறு ரெஸ்ற் போட்டிகளில் மட்டுமே இலங்கை ஆடியுள்ளது, மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் இதுவரை எந்தவொரு ரெஸ்ற் போட்டியிலும் இலங்கை ஈடுபடவில்லை.

இதனால் இலங்கை வீரர்கள் தம் "சிறப்பான நிலையை" (form) தொடர்ச்சியாகப் பேண முடியாதுள்ளது. இலங்கை உள்நாட்டு நிலையும் இதற்கு ஏதுவாயமைகின்றது. 1987-ல் நியூசிலாந்து அணியின் இலங்கை விஜயம் இடையில் கைவிடப்பட்டமையும் அவுஸ்திரேலிய அணி தன் இலங்கை பயணத்தை இரு தடவைகள் ஒத்திவைத்தமையும் சாதகமற்ற உள்நாட்டு நிலையின் பிரதிபலிப்புகளே,

அர்ச்சுனா ரணதுங்காவின் தலைமை மாற்றம் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இலங்கையின் நிலையை மேம்படச் செய்யுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும், □


**JANTHIRAMS**

- கிறாங் சாவ்ற் கிறைண்டிங்
- சிலிண்டர் றிபோறிங்
- லைன் போறிங்

மற்றும் கடைச்சல் வேலைகளுக்கு

யந்திரம்ஸ்

336, மணிக்கூட்டு வீதி,
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்,

# முதலாம் ஆண்டு சிறப்புப் போட்டி

**நிபந்தனைகள் :**

1. சரியான விடைகளை எழுதியனுப்பும் மூவருக்கும் முறையே 250/- 125/ 75/- பரிசுகளாக வழங்கப்படும்.
2. வளர்மதியின் அங்கத்தவர்கள் தவிர்ந்த யாவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
3. பிறிதொரு தாளில் விடைகளை எழுதி முதலாம் ஆண்டு உள்ளம் சிறப்புப்போட்டி என்பதையும் வெட்டி இணைத்து அனுப்புக.
4. விடைகள் யாவும் 10-2-1990க்குமுன்பாக ஆசிரியர் குழு, உள்ளம், வளர்மதி சனசமூக நிலையம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். பெப்ரவரி இதழில் முடிவுகள் வெளியாகும்.
5. நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.
6. விடைகள், பெயர், முகவரி என்பன தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

**வினாக்கள் :**

1. யூலை இதழில் வெளியான அட்டை ஓவியத்தினை வரைந்தவர் யார்? அவ் ஓவியத்தின் பெயர் என்ன?
2. விண் வெளிப் பயணம் செய்த முதல் பெண்மணி யார்?
3. ஐந்து டெஸ்டுகள் கொண்ட கிரிக்கெட் தொடர் ஒன்றில் 974 ஓட்டங்களைப் பெற்ற கிரிக்கெட் வீரர் யார்? எந்த நாட்டவர்?
4. வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் இலச்சினையில் என்னென்ன உருவங்கள் வரையப்பட்டுள்ளன?
5. ''உனக்கு இன்னும் இரண்டு பெண் சகோதரங்கள் இருக்கே. அது உனக்கு பொறுப்புத் தானே. நீ என்னதான் கூத்தடிச்சாலும் அது உனக்குப் பிரச்சனைதானே''.
   மேற்படி வசனம் யாருடைய எந்தக் கதையில் இடம் பெறுகிறது?
6. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற புகழ்பெற்ற கூற்று யாரால் கூறப்பட்டது?
7. கடலால் இரண்டாகப் பிரிக்கப்பட்டு இரு வெவ்வேறு கண்டங்களின் கீழ் அமையப் பெற்றிருக்கும் நாடு எது?
8. அதிக நேரம் மூச்சை அடக்கிக் கொண்டிருக்கக் கூடிய உயிரினம் எது?
9. ஒக் / நவம் இதழில் வெளியாகிய 'சின்னமனுஷி' என்ற ரஷ்ய சிறுகதை ஆசிரியரின் இயற்பெயர் என்ன?
10. வசந்தன் கூத்து, கொம்பு முறி, மகுடி போன்ற கலைகள் இலங்கையில் ஒரே ஒரு மாவட்டத்திற்கு மட்டும் சொந்தமானவை. அந்த மாவட்டம் எது?

முதல் ஆண்டு
**உள்ளம்**
சிறப்புப்போட்டி

FOR
PRINTING PAPERS
PRINTING INKS
STATIONARIES
&
ARt & WRITING MATERIALS

VISIT

**ASEERVATHAM STORES**

61, Grand Bazzar
Hospital Road,
JAFFNA.

அழகான நவநாகரிக—
றெடிமேட் ஆடை வகைகள்— ஆண் - பெண் - சிறுவர்
அனைவர்க்குமேற்ற ' ஜவுளி வகைகள்.....
சேட்டிங், சூட்டிங், ரீசேட், வகைகள்.....
அன்பளிப்புப் பொருட்கள்.....
அனைத்திற்கும்—
மறக்கமுடியாத ஸ்தாபனம்

**HARAN TEXTILES & FANCY GOODS**
**ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ் அன் பான்சி குட்ஸ்**

பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி,
யாழ்ப்பாணம்,

# திருப்பதி ரெக்ஸ்

33, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

ஒளிவீசும் எழில் வடிவம்
ஒயிலான கலை வடிவம்
நிறைந்த
காஷ்மீர், காஞ்சிபுரம், மணிப்புரி
பிடவை வகைகளும்
அனைத்து
றெடிமேட் ஆடை வகைகளையும்
ஒரே இடத்தில் தெரிவு செய்ய

**THIRUPATHY TEX**

33, Model Market, JAFFNA.



—உள்ளம்

உயர்வுபெற எம் உளமார்ந்த வாழ்த்துக்கள் ,...,

உங்கள் இல்லத்தரசிகளின்
இல்லத்தேவைகள் அனைத்திற்கும்

சிவகுமார் ஸ்ரோர்ஸ்

*282, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*







கட்டிடத்துறை உலகில்

வானளாவி நிற்பது

## சமக்கோன் லிமிட்டெட்

( கட்டிட ஒப்பந்தக்காரர்களும் பொறியியலாளர்களும் )

பிரதான காரியாலயம்
3/A 10வது ஒழுங்கை,
கொழும்பு-3
தொலைபேசி : 580511

கிளை
165, 4ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

யாழ் நகர மக்களே ● ● ● ● ● ●

உங்களது தேவைக்கு

எங்களை நாடுங்கள் ● ● ● ● ● ● ●

● பிளாஸ்ரிக் வகைகள்

● மணிக்கூடு வகைகள்

● விளையாட்டுச் சாமான்கள்

● அன்பளிப்புப் பொருட்கள்

எவையானாலும்

மொத்தமாகவும் சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ள

இதோ உங்களை அழைக்கிறது

# ஓமான்ஸ் பலெஸ்

● தரமான பொருள் ● நிதான விலை ● கவர்ச்சிகரமான

விசேட கழிவு உயர்தரசேவை

# OMANS PALACE

(OPPOSITE TO BUS STAND)

404/1, Hospital Road,

JAFFNA